1—3 32 "UDAYAM" Weekly. Reg.

உதயம்

வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 6—10—46 வியய ஹு புரட்டாசி 20உ ஞாயிறு | இதழ் 10

ஜீப், ஏர்!

யுத்தத்திற்கு உபயோகப்பட்டுவந்த ஜீப் மோட்டார் வண்டியைக் கொண்டு முக்கோண வடிவங்கொண்ட மெஷின் ஏர் உழுவதற்கு, ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த 'ஜீப் ஏர்,' ரிசால்பூர் என்ற இடத்தில் உபயோகிக்கப்பட்டது. அற்புதமாக வேலை செய்கிறதாம்.

ஆணுக்குப் பெண் அடிமையா?

எனதன்பார்ந்த இந்தியச் சகோதரிகாள்! பெருந் தூக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் அருமைத்தோழிகாள்!!

விஞ்ஞான சாஸ்திரமும் அறிவு வளர்ச்சியும், சுதந்தர தாகமும், சமதர்ம வேட்கையும் வீறு கொண்டெழும், இவ்விருபதாம் நூற்றாண்டில் "நமது நிலைமை என்ன?" நாம் ஏன் அடிமை கொள்ளப்பட்டு, கொடுமைக்குள்ளாகி நிலை கலங்கி நிற்கின்றோம்? நம்மை இந்நிலைக்கு கொணர்ந்தவை எவை? எவர்? நமது நிலைமையைச் சீர்திருத்தி சமத்துவம் பெற்று, ஆண்கள் சமானமான வாழ்வெய்த ஏதேனும் வழியுண்டா என்பதை நிமிர்ந்து நோக்காமல் எங்கு உறக்கங் கொண்டிருக்கிறீர்கள்? இங்ஙனமே உறங்கிக்கிடப்பீரேல் என்று தான் விழிப்பீர்கள்? நித்திரையினின்று என்றுதான் எழுவீர்கள்? அந்தோ! அந்தோ!! சுதந்தரச் சூரியன் வெப்பமாய்க் காய்கின்றானே! சமத்துவத் தென்றல் இன்பமாய் வீசுகின்றதே! சமதர்ம இடிமுழக்கம் காதை செவிடுபடச் செய்கின்றதே "விடுதலை, விடுதலை!" என்ற ஒலி எங்கும் தொனிக்கின்றதே! இப்பேரிரைச்சலில் இந்திய சோதரிகாள் எவ்வாறு உறங்குகிறீர்கள்? ஐயோ! என்று தான் விழிப்பீர்கள்!! என்று தான் விழிப்பீர்கள்!!

என்னருமைச் சகோதரிமார்! கண் விழித்து இப்படிச் சற்றுத் திரும்பிப் பாருங்கள்!

இதோ ஆகாயராணிகள் விமானத்தில் பாய்கின்றார்கள், மேனாட்டு மாதுசிரோன்மணிகளின் வீரத்தைப் பாருங்கள்! வங்கிஷ் பெண்கள் படுதா முறையை யொழித்து மேனாட்டுக்கு, இராணுவப் பயிற்சியும், இதரக்கலைகளும் பெற அணி அணியாகச் செல்கின்றனர்! பர்மாவைப் பாருங்கள்! மகளிரெல்லாம் வியாபாரத்துறையிலும், பத்திரிகைத் தொழிலிலும், ராஜ்ய விவகாரங்களிலும், பொதுத்தொண்டிலும், ஆண்களோடு ஒரே சமத்துவமாக புழங்குகின்றார்கள்! அந்தோ! என்னருமைமிக்க இந்திய சோதரிகாள்! உங்களுக்கு மட்டும் இன்னும் உறக்கமா?

தோழிகாள்! பொன்விளையும் நாடெனவும், புண்ணிய நாடெனவும், பெண் தெய்வங்கள் பரிபாலிக்கும் நாடெனவும் போற்றப்படும் நம் நாட்டிலே (இந்தியாவிலே) நமது நிலைமை என்ன?' என்பதைச் சிந்தித்தீர்களா? பிறந்தது முதல் இறக்கும் வரையும் நமது சமூகத்திலே நாம் கொடுமை சூழ்ந்தவர்களாகவே வாழ்ந்து வருகின்றோம்! ஏழு தருமக் கோட்டைகளைக்

இதன் தொடர்ச்சி 8ம் பக்கம்

ஈழ நாடும் தமிழ்ச் சங்கமும்

திரு. A. முத்துத்தம்பி பிள்ளை
யாழ்ப்பாணம்)

முதற் சங்க முதலாய மூச் சங்கத்திலும் விளங்கிய புலவர் பல்லாயிரவர். அவர்கள் ஒரு ஜாதியினரும் ஒரு சமயத்தினரும் ஒரு தேயத்தினரும் ஒரு தொழிலினரும் அல்லர்.

அவர்கள் பலஜாதியாளரும் பல சமயிகளும் பல தேயத்தினரும் வேறுபட்ட தொழிலினருமாயே யிருந்தாரென்பது அவர்கள் பெயரூர் முதலியவற்றால் நன்கு துணியப்படும்.

தமிழ்நாடு, செந்தமிழ் நாடும் கொடுந்தமிழ் நாடுமென, இருபாற்படும். அவற்றை மருவிச் சூழ்ந்துள்ள நாடுகள் பதினேழு.

அவை,

"சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந்துளுகுடகங், கொங்கணங் கன்னடங், கொல்லந் தெலுங்கங் கலுங்கம் வங்கம், கங்க மகதங்கவுடங் கடாரங் கடுங்குசலங், தங்கும் புகழ்த் தமிழ் சூழ் பதினேழ் புவிதாமிவையே" என்பதால் பெறப்படும்.

அவற்றுள், சிங்களம் என்பது தென்பாண்டி புன்னாடுகளுக் கணித்தாயுள்ளது.

ஈழம் என்பது சிங்களத்தின் பரியாயமும் பகுதியுமா யடங்குமென்பது இலக்கண விளக்கம். "செந்தமிழ் நிலஞ்சேர்" என்னுஞ் சூத்திரவுரையாற் கொள்ளப்படும்.

மண்டலப் பெயர் கொண்டு விளங்கும் நாடுகளுக்குள்ளே ஈழமு மொன்றாம்.

சேரமண்டலம் சோழ மண்டலம் பாண்டி மண்டலம், ஈழ மண்டலம் தொண்டை மண்டலம் என வருதல் காண்க.

சிங்களமென்னும் பெயர் சிங்குவாகுவின் புத்திரன் ஆண்டமையால் வந்ததென்பது பொருந்தாது. சிங்குவாகுவின் புத்திரன் இலங்கைக்கு வந்தது இன்றைக்கு இரண்டாயிரத்தைந் நூறு வருடங்களுக்கு முன்னராம். இன்றைக்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன்னுள்ள பாரதத்திலே சிங்களமென்னும் பெயர் கேட்கப்படுகிறது.

இலங்கைக்குச் சிங்களமென்னும் பெயர் அங்குள்ள கடுவாப்பட்டையால் வந்தது. சிங்களம் என்பதின் பொருள் பட்டை, சிங்களத்து வீபம்—பட்டைத் தீவு.

சிங்களத் தீவின் வடபாகமும் கீழ்பாகமும் பெரும்பாலும் ஈழ மண்டலமென வழங்கப்பட்டது. இவ் வீழ மண்டலம் இலங்கைக்கு விஜயராஜன் வந்த (543 B. C.) காலத்துக்கு முன் அஞ்ஞாவது இரண்டாயிரத்து நானூறு வருடத்துக்கு முன்னர் தமிழ் மக்கள் குடிகொண்டிருந்த நாடாம்.

இவ்வுண்மை விஜயராஜன் வரும் போது திருக்கேதீச்சரம் கிலமாயிருந்ததென்றும், பின்னாதனை அவன் சிரணோத்தாரணம் பண்ணுவித்தானென்றும் வரும் "வைபவ மாலை', யாற்றுணியப்படும்.

இன்னும் பாலாவி, மாதோட்டம், மாந்தை என்னும் தமிழ்ச் சொற்கள் இடப் பெயராய்ப் பண்டைக் காலந் தொட்டு அங்கே வழங்குதலும் தேவாரத்திலும், தேவாரத்திலே பாலாவி மாதோட்டம், திருக்கேதீச்சரம் திரிகோணமலை என்னும் பெயர்கள் வருவதிலும் பேட்டோலக்சு, பென்னட் (Bertolocci, Bennet) முதலிய ஐரோப்பிய பண்டிதர்கள் எழுதிய இலங்கை வரலாற்றில் "விஜயன் வருதற்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்னே தமிழர் இலங்கையிற் குடிகொண்டிருந்தார்கள்" எனக் கூறுதலும்! ராயல் ஏஷியாடிக் சொசைட்டியாரது பத்திரிகையிலே. (Journal of the Royal Asiatic Society, Ceylon Branch 1148, p. 73) "ரோமர் இலங்கையிலே வர்த்தகஞ் செய்த காலத்திலே தமிழர் மாதோட்டத்தை இராசதானியாகக் கொண்டு அரசசெய்தார்கள்" என்றும்,

"அவ்வாக விசயன் காலத்துக்கும் யாழ்ப்பாடி காலத்துக்கும் மிகவும் முந்திய பழமையினை யுடையது" என்றும் வருவன இதற்கு உதாரணமாம்.

இவ்வாறு இலங்கையில் அரசு கொண்டிருந்த தமிழரசர் சோழ பாண்டி மண்டத்திராசு பரம்பரையினரும் அவரோடு கலப்புடையருமாயிருந்தார்கள். அவர்கள் மாதோட்டத்திலே கட்டியிருந்த கோட்டை மிக்க வலிமையும் அழகும் அற்புதமு முடையது. பெருமரக்கலங்கள் மன்னார்க் கடலில் வருமாயின் அவைகளைத் தன் மாட்டிழுத்துக் கொள்ளும் காந்தப் பொறியுடையதாயிருந்த தென்பர். இத்துணைச் சிறந்த நாகரிகம் வாய்ந்த அந் நகரத்து மக்கள் தமிழ்க் கல்வியிலே பேரபிமானமும் பாண்டித்தியமும் உடையராயே விளங்கினராதல் வேண்டும். அவர்கள் காலம் முதற் சங்கமும் இடைச் சங்கமும் நடைபெற்ற காலம். அச்சங்கங்கள் நடைபெற்ற நகரங்களுமோ மிகச் சமீபத்தே எதிர்க் கரையிலே யிருந்தன.

மாதோட்டத்துத்துப் புலவர்க்கு அக்கரையிலேயுள்ள சங்கமும் அக்கரையிலேயுள்ள புலவர்க்கு இக்கரையிலேயுள்ள இராச சபையும், பிரபுக்கள் மிகுதியும், திருக்கேதீச்சர சிவாலயமும் காதற்பொருளாமன்றோ? அதனால் அங்குள்ளார் இங்கும், இங்குள்ளார் அங்கும் போக்குவரவுடையராயிருந்தனர். தமிழ்ச் சங்கத்திலே ஆசனம் பெற்று வீற்றிருத்தற்குச் சிங்காசனம் பெற்ற அரசரும் விரும்பித் தம் புலமை நாட்டினரென்றால் அக்காலத்தில் அச்சங்கப் பலகை யேற்றம்போலும் பெரும்பேறும் பெரும்போகமும் வேறில்லை யெனல் வேண்டும்.

எனவே ஈழ நாட்டுப் புலவரும் அரசரும் அதனில் பெரிதும் விரும்பினராதல் வேண்டும்.

"யாதானும் நாடாமா லூரா
மால் என் னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு"

இத் திருவாக்குக் கொடுந் தமிழ் நாட்டிலே புலைக் குலத்திலே பிறந்தவரும் கடைச் சங்கப் பலகையேறித் தம்மை பிரமதேவரது அம்சாவதாரமென நாட்டினவருமாகிய தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரது சுவானுபவமன்றோ! இவ்வுண்மை முந்திய சங்கத்தாருக்குமொப்பாமன்றோ? அதனை ஈழநாட்டு மக்கள் கடைப்பிடியாதிருந்தவர் அல்லர். ஆகவே ஈழநாட்டுப் புலவர்களும் அரசரும் தமிழ்ச் சங்கமேறி யிருந்தாராதல் வேண்டும்.

முதற் சங்கத்திலே யிருந்த முடிநாகர் என்பவர் ஈழநாட்டு வேந்தராதல் வேண்டும். இலங்கையிலே விஜயராஜன் காலத்துக்கு முன்னே நெடுங்காலம் அரசு செய்தவர்கள் நாகராயரென்னும் பெயர் புனைந்திருந்தனர். முன்னொரு காலத்திலே இலங்கையிலே நாகர்கள் மிக்க நாகரிகமும் பராக்கிரமமுடையவராயிருந்தாரென்பதும் அவர்கள் இராச்சியம் ஒரு காலத்தில் இமயவரைக்கும் வியாபித்திருந்ததென்பதும், நாகப்பட்டினம், நாகபுரம் முதலிய நகரப் பெயர்களால் அநுமிக்கப்படும்.

நாக கன்னிகை வயிற்றிலே சோழ ராஜனுக்குப் புத்திரனாய்ப் பிறந்து நாக பட்டினம் போய்த் தந்தையைக்கண்டு தொண்டை நாட்டுக்கு அரசனாய் முடிசூட்டப் பெற்றவன் ஒருவனுளன் என்பது பத்துபாட்டிலே கூறப்படுகின்றது. அந்நாக கன்னிகை இந்நகர் குலக்கொடியாதல் வேண்டும். இந்நாகர்கள் பிற்காலத்திலே தமிழரால் அடிப்படுத்தப்பட்டரசிழந்து சுருங்கினார்கள். அவர் வழி வந்தோரே இக்காலத்திலே விந்தமலையிலுள்ள வேடர் என்பது அநேகர் துணிபு.

இன்னும் ஈழ நாட்டிலே நாகர் கோயில் என்னும் பெயரால் ஒரூர் உளது. யாழ்ப்பாணம் பூர்வம் நாகர்கள் இங்கிருந்தடைக்குச் சான்றாகும். அரசிழந்த நாகர்கள் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலும் நயினார் தீவிலும் போய் ஒதுங்கியிருந்தனராதல் வேண்டும்.

இன்னும் கடைசி சங்கத்திலிருந்த **இளநாகரும்** இலங்கை அரசருளொருவராதல் வேண்டும். இளநாகன் என்னும் பெயருடைய அரசர் ஒருவர் கிறிஸ்தாப்தம் 38ல் அரசு செய்தவர். அவர் பின்னர் அரசிழந்து பாண்டிநாடு சென்று அங்கே சிறிதுகாலம் வசித்துப் பாண்டியன் கொடுத்த சேனை கொண்டு தமதரசு மீட்டவர். அவர் அங்கிருந்த காலத்தில் இறையனாரகப் பொருளுரையை கேட்டார் போலும். இறையனாரகப் பொருளுரையை ஆசிரிய பரம்பரையாகப் பாடங் கேட்டாருள்ளே இளநாகரும் ஒருவராகக் கூறப்படுவர். அவர் முசிறி யாசிரியர் நீலகண்டனார்க் குரைத்தாரெனக் கூறப்படுதலால் நீலகண்டனார் அவருக்கு மாணாக்கர் ஆவார். முசிறி என ஈழ நாட்டகத்து மோரூர் உளது. ஆதலின் நீலகண்டனாரும் ஈழநாட்டுக்குப் புலவராதல் வேண்டும்.

இன்னும் மாந்தையிலும் மணற்றியிலும் பாண்டியர் போர் புரிந்துபெற்ற

இதன் தொடர்ச்சி 7ம் பக்கம்

எங்கே பெற்றீர் ?

"சுருண்டு வான் மீதிலேகிச் சோமனை மறைக்கும் மிக்க
இருண்ட மேகங்காள்! உங்கள் எழிலினை எங்கே கண்டீர்"?
"வெருண்டவரின்றி வீரியம் மேவிடுந் தமிழ் நன்னாட்டு
மருண்டமான் விழியினாளின் கூந்தலைக் கண்டவன்றே."

"பாரினை மயக்கும் முருக்கம் பூவினன் னருப்பே! உந்தன்;
சீரியச் செம்மை எங்கே பெற்றனை செப்பாய்"? என்றேன்
"வீரியம் அழகொடாண்மை விளங்கிடும் தமிழ் நன்னாட்டு
நாரியர் உதட்டினின்றிந் நலத்தினைப் பெற்றேன் அன்றே".

"விண்மீனெனவே புள்ளி விளங்கிடும் மானே! உந்தன்;
கண்ணினிப் பார்வை எங்கே கற்றனை கழறாய்"? என்றேன்
"பன்னரும் புகழ் சேர்ந்திட்ட புனிதமாந் தமிழ்நன்னாட்டுக்
கன்னியர் விழியினின்றிக் கருத்தினைப் பெற்றேனன்றே".

"இளமையிலிலங்கி யோங்கும் எழில்மிகு கமுகே! உந்தன்;
பாளையின் அழகை எங்கே பெற்றனை பகராய்"? என்றேன்
"வேலைசூழ் புவியின்மீது விளங்கிடுந் தமிழ் நன்னாட்டு
மாலைபூண் மாதர் தங்கள் கழுத்தினைக் கண்டவன்றே"

"காரெனக் கறுத்துநீண்ட கணுவுடைக் கரும்பே! உந்தன்;
நீரதின் இனிப்பை எங்கே ஏற்றனை சொல்லாய்!" என்றேன்
"பாருள மாந்தர் போற்றிப் புகழ்ந்திடுந் தமிழ் நன்னாட்டு
நாரியர் தங்கள் நாவின் நல்லுரை கண்டவன்றே"

"வில்லினை நிகர்த்து விண்ணில் விளங்கிடும் பிறையே! உந்தன்;
எல்லையில் அழகை எங்கே ஏற்றனை அறிவி"? என்றேன்,
"நல்லவர் மல்கிவாழும் நலமுடைத் தமிழர் நாட்டின்
மெல்லியர் நுதலைக் கண்டிம் மேன்மையைப் பெற்றேன்
அன்றே"

...றல் காரி... ன பெயரல்ல. செல்வர்கள் வீட்டில் செல்வமாக வளர்க்கப்படும் குக்கலின் பெயரும் அல்ல, குறைமதி கொண்டிருந்த குடிமக்களை, மனித உருத்தாங்கி ஏய்த்து வந்த குக்கல் கூட்டத்தின் பெயர். நாட்டு மக்களின் குருட்டு நம்பிக்கையை உறு துணை கொண்டு நயவஞ்சகம் செய்து வந்த நரிக்கூட்டத்தின் பெயர். நாகரிகமற்ற நரபலி செய்து மனித ஊனை உண்ணச் செய்யும் அளவிற்கு பாமர மக்களின் பகுத்தறிவைப் பாழ்படுத்திய பஞ்சைக் கூட்டத்தின் பெயர் ஆண்டவன் பெயர் கூறி அடிமை வியாபாரம் செய்து வந்த கூட்டத்தின் பெயர். மூடப்பழக்க வழக்கங்கள் நிறைந்த நாடுகளுக்குத் தலைமை வகிக்கும் உரிமையில் நம் நாட்டுடன் தீவிரமாகப் போட்டியிடும் நாடொன்றுளது. அந்நாட்டிற்தான் இது போன்ற கூட்டங்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தன. அந்நாட்டு மக்கள் மற்றொரு வழியிலும் நம்மை மிஞ்சியவர்கள்; நிறத்தில்! அந்நாடு வேறெதுவுமில்லை, **ஆப்பரிக்கா தான்**. சில ஒற்றுமைகள் அவர்கட்கும் நமக்கும் இருப்பதால் மட்டும் அவர்களைப் பற்றி அறியவேண்டிய அவசிய மேற்படவில்லை இக்காளில் இந்தியர்கள் இடர்படும் வேளையில் நிறத்திமிர் கொண்டு அலையும் ஆங்கிலேயர்கட்கு ஆப்பிரிக்காவின் முன்னாள் நிலையை எடுத்துக் காட்டி அறிவுறுத்த நடந்த நிகழ்ச்சிகளை கவனிக்க வேண்டும். மேலும் அக்கொடிய கூட்டத்தைச் சேர்ந்தோரில் சிலர் இன்றும் நைகீரியா (Nigeria) வட்டத்தில் வசித்துக் கொண்டு கொலைத் தொழிலை செய்து வருகின்றனரென்று ராய்ட்டர் (Reuter), கூறுகிறது.

அவர்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள உதவி புரிவது அந்நாட்டில் அரசாங்க அலுவல் புரிந்த **ப்ரேன்க் ஹைவ்ஸ்** (Frank Hives) என்பவர். ஆப்பரிக்காவில் ஆங்கில அரசாட்சி முறையை அமைக்க உழைத்த காலத்து ஏற்பட்ட இன்னல்களைக் கூறும் ஏடு; 19-ம் நூற்றாண்டு இறுதி 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் **அரோசக்கு** (Arochuku) எனும் பிரதேச ஆராய்ச்சியை அறிய ஆர்வத்துடன் இருந்தனர் மக்கள். அந்நாட்டில் **லாங்ஜுஜு** (Long Ju-Ju) எனும் கூட்டத்தினர் மக்களை அச்சுறுத்தி அடிமைப்படுத்தி அட்டகாசம் செய்து வந்தனர். இந்த ஆணவக்காரர்களின் அரங்கம் ஒருவாறு அழிக்கப்பட்டிருந்தது. சிதைக்கப்பட்ட கூட்டத்தினின்று சிதறிச் சென்ற சிறு பான்மையோர் தனித் தனியே ஆங்காங்கு அந்தரங்கமாக அன்னியர் அறியாதபடி தங்கள் ஆட்சியை ஆரம்பித்தனர். அன்னியர் தங்களைப் பற்றி அறிந்து கொண்டதாக ஐயுற்றால் அவர்களின் தலைமை ஸ்தாபனம் மாற்றப்படும். ஆதலின் இக்கூட்டத்தைப் பற்றி அறிந்து கொள்வது அரிதாக இருந்தது. இககுழாங்களில் ஒன்றுதான் கமலு ஜுஜு (Kamalu ju-ju) **ஜுஜு** எனும் சொல் கடவுட் சக்தி என்று பொருள் தரத்தக்கது. இது ப்ரன்சு மொழியில் ஜு (Jeu) எனும் சொல்லினின்று திரிந்து வந்தது ப்ரன்சு மொழியில் அதற்கு அர்த்தம் ஒருவித களியாட்டம். ஆனால் அது ஆப்பரிக்காவில் கொலைத்தொழில் புரியும் கூட்டத்தினருடைய மதத்தின் மந்திரச் சொல்லாக உளது நிற்க. ப்ரான்கோ [illegible]ஸ் அதிகாரியாயிருந்து வந்த [illegible]வட்டத்தில் அடிக்கடி கமலு என்ற பெயர் உபயோகிக்கப்பட்டு வந்தது தற்போதும் அவ்வட்டத்தில்தான் இக்கூட்டத்தார் இன்னல்புரிவதாக செய்தி வந்தது.

ஆப்பிரிக்க நாட்டு மக்களின் சமுதாய வாழ்வு அபிவிருத்தி அடைவதில் ஆளச் சென்ற ஆங்கிலேயர் அக்கரை காட்டியதில் ஆச்சரியமில்லை. அவர்களின் வாழ்வு சீரடைந்தாலதான் ஆங்கிலேயர் நிறம்பட ஆளவும் வியாபார உலகில் ஆதிக்கம் செலுத்தி ஆதாயம் பெறவும் முடியும். ஆதலால் அந்நாட்டுப் பழங்குடி மக்களின் வாழ்வை அக்கரையுடன் கவனித்து வந்தனர் ஆங்கிலேய அதிகாரிகள். தோழர் ஹீவ்ஸ் இதில் சிறிது அதிக ஆர்வத்துடன் செயலாற்றி வந்தார் கமலு கூட்டத்தைப் பற்றி எங்கும் பேசப்பட்டு வந்த போதும் அதன் அலுவலகம் எங்கிருக்கின்றதென்பது அறிய முடியாமலிருந்தது. ஹீவ்ஸிற்கு ஆப்பரிக்க நாட்டு மொழிகளில் சிலசிறிது தெரியும். இது அவருக்குக் கொடியோர் கூட்டத்தை பற்றி துப்பறிய மிகவும் உதவியாயிருந்தது. ஓர் நாள் அவர் தனது இருப்பிடத்தினின்று நீதி மன்றத்திற்குச் செல்லும் வேளையில் மன்றத்துச் சேவகனிடம் அந்நாட்டைச் சேர்ந்த ஒருவன் ஈபோ (Ibo) மொழியில் "கமலு இன்றிரவு நடைபெறும் கூட்டத்திற்கு உன்னைவரும்படி உத்தரவிட்டிருக்கிறார். தவறினால் தலை போகும்" என்று கூறிச்சென்றதைக் கேட்டார். அன்றுமாலை அச்சேவகனை தனி அறைக்கு அழைத்து பலவிதமாகப் பயங்காட்டி கமலு கூட்டத்தைப்பற்றிய செய்திகளைத் தெரிந்து கொண்டார். மேலும் அச்சேவகன் தன்னை பலியிடவே கமலு அழைத்திருப்பதாக ஐயுறுவதாகவும்கூறினான். கமலு கூட்டம் பல அங்கத்தினர் கொண்டது. அக்கூட்டத்தில் அங்கத்தினராகச் சேருவதற்கு கன்னியர்களும் கால்நடைகளும் காணிக்கையாகத் தரப்படும். மேலும் எவ்விதமான இடையூறுகளையும் கமலு தெய்வத்தின் சக்தியால் தடுக்கமுடியும் என்ற உறுதிமொழி அக்கூட்டத்தின் தலைவனால் அளிக்கப்படும். இவ்விதமாக சேர்ந்த ஒருவன் நாளடைவில் பல நங்கையர்களை மனைவிகளாயும், ஆடு மாடு, கோழி நாய் இவைகளையும் பெற்று பணக்காரனாகின்றான். இந்நிலை அடைந்த உடன் இவன் கமலுக் கூட்டத்துத் தலைவனின் கவனத்தால் கவரப்பட்டு தேவதையின் சக்தியை அதிகப்படுத்த பொறிக்கப்படும் தலைகளில் ஒன்றாக இவன் தலை சேர்க்கப்படும். அவனது உடைமைகள் கமலு கூட்டத்தின் தலைவனைச் சாரும். அவனின் மனைவிமார் கமலு தலைவனால் இரகசியமாக நடத்தப்படும் விபசார விடுதியில் சேர்க்கப்படுவர். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் வருமானத்தைக் கருதி அவர்களின் எதிரிலேயே கழுத்துத் திருகப்பட்டுக் கொல்லப்படும். இவர்கள் முதுமையடைந்தால் விடுதியில் தாய் கிழவிகளாக நியமிக்கப்படுவர். தேவதையின் சக்தியை அதிகப்படுத்தவும், மனது குளிரவும் மானிடர் மானியமாக அளிக்கப்பட்டனர். இவ்வித பலி அடிக்கடி கொடுக்கப்பட்டு வந்தது. பலிக்குக் கொண்டுவரப் பட்டவர்கள் தேவதையின் முன் கட்டப்பட்டு சக்திக்கு பூஜைகள் செய்து பறை முதலிய வாத்தியங்கள் கொட்டப்பட்டு, பலியாகப்போவோனைச் சுற்றிசுற்றி பஜனைக் கூட்டத்தைப்போல் திருவிளையாடல்கள் பல புரிந்து ஆராதனையைத் தொடங்குவர். இந்த அட்டூழியம் அந்தரங்கமான இடத்தில் அர்த்த இராத்திரியிலே நடக்கும்.

ஒதுக்குப்புறமான இடத்திலே ஓர் குடில். அதனுள் நுழைந்ததும் ஒரு பெரிய அறை. எரிக்கப்பட்டிருக்கும் தீயினால் அங்கு ஒளி யிருக்கும். பறை மந்திரம் இவைகள் ஒலிப்பது அங்கு கூட்டம் கூடியிருப்பதைக் குறிக்கும் ஓலையிலே ஒட்டப்பட்டிருக்கும். ஓரிரண்டு படங்கள், அவைகட்கு மண்டை ஓடுகளும் எலும்புச் சரங்களும் சட்டம். இரு பெரிய வட்டமான மரக்கட்டைகள். மண் பாண்டம். ஒரு பறை. அதனருகே உலர்த்தப்பட்ட தோல். சிறிது தூரத்திலே பெரிய ஆசனம் ஒன்று. அதைச் சுற்றி உள் நாட்டு உடை அணிந்த காவலாளிகள். நீண்ட ஆடை, படோடோபம் அளிக்கக்கூடிய வஸ்திரங்கள், பார்ப்பவர் அஞ்சும்படியும் முகம் தெரியாத படியும் உள்ள முக அலங்காரம், காட்டுப் பறவைகளின் சிறகுகளால் விசிரிபோல் செய்யப்பட்ட தலை அணி, கீழ் தாடை அகற்றப்பட்ட மண்டை ஓடுகளாலான மாலை. இந்த இலட்சணங்களுடன் அப்பெரிய ஆசனத்தில் ஓர் உருவம். அவ்வுருவத்தின் எப் பாகமும் வெளித் தெரியாது. அவ்வுருவம் எவருடையது என்று ஒருவரும் அறியார். முகத்தின் முடியைத் துளைத்து வெளித் தெரிவது கனல் சக்கரம் கண்கள் ஒரு கொடிய மிருகத்தின் பார்வையை ஒத்திருந்தது. ஆம் அது மிருகத்தினுடைய பார்வைதான். மனித உருவிலே மக்களை மதியீனர்களாக்கி அவர்களின் வாழ்வை ஓர் பயங்கரச் சம்பவமாகச் செய்துகொண்டிருந்த விலங்கின் பார்வைதான். அவ்வுருவம்தான் தன்னைக் கமலுக் கூட்டத்தின் தலைவனென இயம்பிக் கொண்டிருந்தது.

நாட்டிலே நலம் படைத்து வாழ்ந்து வந்த சீமான்கள் மரித்த பின்னும் மறு உலகிலே உல்லாசமான வாழ்வை நடத்த விரும்பினர். ஆதலின் அவர்களின் இறுதிக் கடனின்போது அடிமைகள் வெட்டப்பட்டு அத்தலைகள் இறந்த பிரபுவின் சமாதியின் அருகிலே புதைக்கப்பட்டன, பலி கொடுக்கப்பட்ட பாமரர்களின் கூட்டம் பரலோகத்திற்குச் சென்று அங்கு அப்பிரபுவிற்கு பணி புரியும் என நம்பி. இப்பலிக்கு வேண்டிய அடிமைகள் வியாபாரம் செய்யப்படும் கள்ளமார்க்கட்டின் அதிகாரி, கமலு.

தேவதைக்கு ஆராதனையும் ஆர்பாட்டமும் முடிந்தபின் பலி யிடப்பட வேண்டிய அடிமையின் சிரம் சிதைக்கப்படும். சிந்தும் இரத்தம்கூட வீணாக்கப்படுவதில்லை. அதை உபயோகித்துக் குப் செயூது வந்திருந்தவர்கட்குக் கொடுக்கப்படும். சிரம் கீழ் தாடை அகற்றப்பட்டு தேவதையின் சக்தியை அதிகப்படுத்த போடப்பட்டிருக்கும் மண்டை ஓடுகளால் ஆன மாலையிற் சேர்க்கப்படும். உடலை உடன் இருந்தோர் உண்ணுவர் விருந்தாக. இந்த முறையிலே கமலு ஸ்தாபனம் வேலை செய்து கொண்டுவந்தது. இது ஒன்று மட்டுமல்ல ஆங்காங்கே இவ்விதமான சிறிய பெரிய ஸ்தாபனங்கள் இருந்து வந்தன. ஆப்ரிக்காவிற்கு ஆங்கிலேயர் சென்ற காலத்து, தன் அதிகாரத்தை நிலை நாட்ட அவர்கட்கு இடைவிடாது இன்னல் இழைத்து வந்தனர் இக்குழுவினர். ப்ரேன்கோ ஹைவ்ஸ் போன்றோர் அரும்பாடுபட்டு அக் கூட்டத்தினரை அடக்க முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றனர்.

தம்பீ இனி உன் சூழ்ச்சி பலிக்காது

சென்ற வாரம் தொடர்ச்சி

முறையில் அவர்களுடைய விகிதாச்சாரப் பங்கை அரசாங்க உத்தியோகங்களிலும் கொடுத்துச் சமத்தி வழங்கப் பட்டு வந்திருக்கிறது.

முன்பு இருந்த ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியா மந்திரி சபை இந்த உத்தரவை மாற்ற வேண்டுமென்று எண்ணவில்லை. இப்பொழுது ஸ்ரீ பிரகாசம் மந்திரிசபைக்கு மட்டும் மேற்படி உத்தரவை மாற்ற வேண்டுமென்ற அவசியம் என்ன வந்தது?

ஜனத்தொகையில் 100க்கு 3 வீதம் உள்ள பிராமணர்களுக்கு இப்பொழுது அமுலில் இருக்கும் உத்தரவின்படி 17 ஸ்தானங்கள் கிடைக்கும் நிலைமை இருக்கிறது. அதாவது 12 பேருக்கு 2 பேர் பிராமணர்களாக இருப்பர்.

நியாயமாகப் பார்த்தால் 100க்கு 3 சதவிகிதம் உள்ள மக்களுக்கு அவர்கள் விகிதாச்சாரப்படி 3 ஸ்தானங்கள் தான் கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால் முன்னாள் முதல் அமைச்சராய் இருந்த தமிழ்ப் பெருமகனாரால் 100க்கு 17 சதவிகிதம் சலுகை கொடுக்கப் பட்டிருக்கிற தமிழரின் பெருந்தன்மைக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

100க்கு 17 சதவிகிதம் உள்ள இந் நாட்டுப் பெருங்குடிமக்களுக்குக் குறைந்த ஸ்தானங்களே கொடுக்க வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தை மனதில் வைத்[illegible] தகுதி திறமை என்ற காரணங்கள் சொல்லப்படுகிறது போலும்.

சர்க்கார் யாருடைய வரிப்பணத்தில் நடக்கிறது என்பதையும், மந்திரிகள் யாருக்குப் பொறுப்புடையவர்கள் என்பதையும் பிரகாசம் மந்திரி சபையார் இவ்வளவு சீக்கிரம் மறந்து விட்டதைக் கண்டுதான் நாம் ஆச்சரியப்படுகிறோம்.

உதயம்

சந்தா விபரம்:

உள்நாடு:-

வருடச்சந்தா ரூ	5—0—0
6 மாதச்சந்தா ரூ	2—8—0
தனிப்பிரதி ரூ	0—1—3

வெளிநாடு:-

வருடச்சந்தா ரூ	7—0—0
6 மாதச்சந்தா ரூ	4—0—0

மானேஜர்,
"உதயம்"
திருவத்திபுரம். N.A.

உதித்தது "உதயம்" நன்றே!

சீரெலாம் சிறந்து தோன்ற
  சிறப்புறு தமிழே தோன்ற
பேரெலாம் பெருகித் தோன்ற
  பெருகிடும் பெருமை தோன்ற
நீரெலாம் சூழ்ந்த நாட்டின்
  இன்றுள நிலைமை காட்டி
ஊரெலாம் களிக்கும் வண்ணம்
  உதித்தது "உதயம்" நன்றே!

S. S. அருணகிரிநாதர்.

உதயம்

மலர் 1   6—10—46   இதழ் 10

ஆச்சாரியார் யோசனை

"லைசன்ஸ் முறையை ஒழித்துவிட்டு வர்த்தகதில் போட்டி முறையை ஏற்படுத்த வேண்டும் என்ற, தோழர் ஆச்சாரியார் யோசனையை வரவேற்கிறோம்."

என்று சென்னையில் 30-9-46ல் கூடிய சென்னை மாகாண கைத்தறி ஜவுளி வர்த்தகர்கள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள்.

வர்த்தகத்தில் ஏகபோக உரிமையளிப்பது விரும்பத்தக்கதல்ல. ஒரு கூட்டத்தாரே கொள்ளையடிக்க இடம் கொடுப்பதாகும். விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமே யல்லது ஒரு சிலரே வினியோகிக்க வேண்டும் என்பது ஆதரிக்கக்கூடியதேயல்ல. இதனால் தான், பதுக்கலும் கொள்ளை இலாபமும் இலஞ்சமும் ஏற்பட இடம் ஏற்படுகிறது. வினியோகிப்பதில் போட்டியேற்பட்டால், ஒருவரே கொள்ளை இலாபம் சம்பாதிக்க இடமில்லை யென்ற நிலைமை ஏற்பட்டால், பதுக்கலுக்கும் இலஞ்சத்திற்கும் இடமே ஏற்படாது. கொள்ளை லாபம் கிடைக்கிறது என்ற காரணத்தினாலும் தங்களைத்தவிர வேறுயார் மூலமாகவும் பொருள்கள் மக்களுக்கு கிடைக்க முடியாது என்பதினால் தான் பதுக்கி வைக்கவும், லஞ்சம் கொடுக்கவும் முற்படுகிறார்கள்.

பொதுமக்கள் இதனைச் சிந்தித்துப் பார்த்தால், சென்னையில் கூடிய கைத்தறி ஜவுளி வர்த்தகர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை வரவேற்பார்கள் என்றே நம்புகின்றோம். தோழர் ஆச்சாரியாரின் யோசனையை ஆதரிப்பார்கள் என்றே கருதுகின்றோம்.

பொருள்களின் விலை விஷம்போல் ஏறி வருகிற சமயத்தில் ஏகபோக உரிமை வழங்குவது ஒரு நாளும் வரவேற்கக் கூடிய காரியமாகாது. பொதுமக்கள் ஆங்காங்கு கூட்டங்கள் கூடி இந்தயோசனையை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

தென்னாட்டார் கிள்ளுக்கீரையா?

தென்னாட்டார், தமிழர்கள் ஒரு காலத்தில் யாவரும் நடுங்கி வாழும்படியான உயர்ந்த நிலையிலிருந்து வந்தார்கள். பாரெங்கும் தமிழ் கொடி பறக்கக்கண்டு களித்தார்கள். மற்றவர்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலையில் நாகரிகமாக வாழ்ந்து வந்தார்கள். அவ்வளவு உயர்ந்த நிலையில் வாழ்ந்த மக்கள் இன்று எங்குபார்த்தாலும் இழிவுபடுத்தப்படவும் துரத்தப்படவுமான நிலையிலிருந்து வருகிறார்கள். எங்கெங்கு அந்நாளில் சிறந்து வாழ்ந்து வந்தார்களோ அங்குகங்கு இன்று இழிவு படுத்தப்படுகிறார்கள். உதாரணமாக, இலங்கையில் இழிவுபடுத்தப்படுகிறார்கள்; பர்மாவிலும் இதே கதிதான்; தென்னாப்பிரிக்காவிலும் இதே கதி தான். ஆக எங்கு பார்த்தாலும் தமிழ் மக்கள் தென்னாட்டு மக்கள் மதிக்கப்படுவதில்லை.

வெளிநாடுகளில் தான் அவ்வாறு இருக்கிறதென்றால், நம் நாட்டிலாவது மதிக்கப்படுகிறோமா என்றால், அதுவுமில்லை. தமிழ் நாட்டான் என்றால், வடநாட்டிலே மிகக்கேவலமாக மதிக்கப்பட்டு வருவதை நம் தலைவர்கள் பலகாலமாக எடுத்து கூறிவருவதை யாரும் அறியாமல் இருக்க முடியாது. ஐரோப்பாவில் துருக்கியை அந்நாளில் அதாவது முஸ்தபா கமால் தோன்றுவதற்குமுன் கேவலமாக கருதியும் நடத்தியும் வந்ததும் [...] இந்தியா என்று அழைக்கப்படும் இவ்வுப கண்டத்தில் தமிழர்களை கருதியும் நடத்தியும் வருகிறார்கள்.

அரசியல் உலகில் தென்னாட்டில்—தமிழ் நாட்டில் வட நாட்டுக்காரர்களுக்குத்தான் மதிப்பும் செல்வாக்குமிருந்து வருகிறது; வடநாட்டுத் தலைவர்களை இறக்குமதி செய்து அவர்களைத் துதி பாடுவதே தமிழ் நாட்டாரின் வேலையாகயிருந்து வருகிறது. இதிலிருந்து நம்மை நாமே இழிவுபடுத்திக்கொள்கிறோம் என்பதை நம்மவர் உணர்ந்து கொள்வதில்லை. நாமே நம்மைப்பற்றி இவ்வளவு அலட்சியமாக இருந்துவருவதினாலும் வடநாட்டானுக்கும் வேற்று நாட்டனுக்கும் மதிப்புகொடுத்து வருவதினாலும் நாம் இன்று இவ்வாறு இழிவுபடுத்தப்படுகிறோம் என்பதை யாரும் உணர்வதில்லை.

பாருங்கள், தோழர் காந்தியார் தமிழ் நாட்டாரைக் குறித்து— தென்னாட்டாரை குறித்து எவ்வளவு தூரம் மதிப்புவைத்திருக்கிறார் என்பதை. உணவுப் பொருள் நெருக்கடி ஏற்பட்டிருப்பது பற்றி தோழர் காந்தியார், டில்லியில் 24-ந் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில், அவர் குறிப்பிட்டிருப்பதைப் பாருங்கள்.

"தென்னாட்டு மக்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். தென்னாப்பிரிக்காவில் பாலசுந்தரம் என்ற ஒப்பந்தக் கூலி மூலமாகவே தமிழ் நாட்டுடன் முதல் முதல் எனக்குத்தொடர்பு ஏற்பட்டது. என் பற்களைக்கூட அவன் பெயர்த்து விட்டான்.

பிறகு, மேற்படி ஒப்பந்தக் கூலிகள் சத்யாகிரஹ இயக்கத்தில் சேர்ந்ததும் அவர்களுடைய புத்திசாலித் தனத்தையும், தன்னம்பிக்கையின் உயர்வையும் நான் அறிந்தேன்.

அவர்களிடம் ஒரு ராத்தல் ரொட்டியும் கொஞ்சம் சர்க்கரையும் தானிருந்தது. ஒரு வித புல்லிலிருந்து அவர்கள் ஒருவகை உணவைத் தயாரித்து வயிறார உண்டு, பாட்டுப் பாடி சுகமாக காலம் கழித்தனர்.

தென்னாட்டுக்கு ஒரு குறைவுமில்லை. அங்கு வாழைப் [...] க்கவே [...] வேண்டும்?

அரிசியில்லாமல் காலம் கழிக்கவேண்டுமென்று சொன்னால் தங்களுடைய அறிவையும் வசதிகளையும் கொண்டு தென்னாட்டினர் அப்படியே செய்யக்கூடும்."

இவைகளிலிருந்து தென்னாட்டாரை—தமிழர்களை அவர் கிள்ளுக்கீரையாக மதித்திருக்கிறார் என்பது விளங்குகிறதா அல்லவா? இன்று காங்கிரஸ் ஆட்சி நடக்காமல், தோழர் காந்தியாரைத் தவிர வேறு யாராவது இவ்வாறு சொல்லியிருந்தால், இந்நாட்டுப் பத்திரிகைகளும், காங்கிரஸ்காரர்களும் எவ்வளவு தூரம் கூப்பாடு போட்டிருப்பார்கள் எழுதியிருப்பார்கள் என்பதை உன்னிப்பாருங்கள். அந்நாளில் அட்வைசர் (ஆலோசகர்) ஆட்சி நடந்த காலையில் உணவுப் பொருளுக்கு மக்கள் கஷ்டப்பட்ட காலையில், 16 அவுன்ஸ் 12 அவுன்ஸாகக் குறைக்கப்பட்ட காலையில், ஆசட்டும், விறகுக்கோ துணிக்கோ மக்கள் கஷ்டப்பட்ட காலையில், காங்கரஸ் தலைவர்களும், இந்நாட்டுத் தாள்களும் என்ன செய்தார்கள்? என்னஎழுதினார்கள்? இவைகளுக்ெகல்லாம் அட்வைசர் ஆட்சிதான் காரணம் தேசிய சர்க்கார் ஏற்பட்டால் தான் இக்கஷ்டங்கள் ஒழியும் என்று கூறவில்லையா? சிறிது கவனமுள்ளவர்களும் இதை மறந்திருக்க முடியாது. இப்பொழுது மகாணத்திலும் மத்தியிலும் காங்கரஸ்காரர்களே நிர்வாகம் நடத்தி வருகிறார்கள். அரிசியின் அளவு பத்து எட்டாகி, எட்டு ஆறாக ஆகும் நிலையிலிருக்கிறது. இதற்கும் ஆபத்து வருமோ என்று அஞ்சி வாழும் நிலைமையில், புல்லிருக்கிறது, புளியிருக்கிறது, கீரையிருக்கிறது மிளகாயிருக்கிறது, தேங்காயிருக்கிறது பழமிருக்கிறது; இவைகள் இருக்கும்போது அரிசியில்லையே என்று ஏன் கவலைப்படுகிறீர்கள்? உணவுக்குப் பஞ்சம் வரும் என்று ஏன் சஞ்சலப்படுகிறீர்கள் என்று கேட்கிறார் காந்தியார்.

தேசிய சர்க்கார் வந்த பிறகு உணவுப்பொருள் நெருக்கடி தீர்ந்துவிடும் அவர்களால் தான் இந் நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்று சொன்னதின் அர்த்தம், இதுதானா? நல்ல வேளையாக கல்லையும் மண்ணையும் தின்று வாழலாம் என்று சொல்லாமல், புல்லையும் புளியையும் கீரையையும் கிழங்கையும் தின்று வாழலாம் என்று சொல்லிவைத்தாரே! கையினாலே நூல் நூற்று உடை தயாரிக்க வேண்டுமென்பது காட்டுமிராண்டி காலத்துக்கு மக்களைக் கொண்டு செல்லும் ஒரு

...று ...ரைக் குறை ...வதில பயனில்லை. அவர் சொல்லுவதை 'வேதவாக்கு' என்று அறிவை அடகுவைத்து விட்டு கண்மூடித்தனமாக "ஆமாம்"சாமி போட்டு வந்ததினால்தான் இன்று இவ்வளவு தூரத்திற்கு அவர் போய் விட்டார்.

அன்று, கிளைவ் தென்னாட்டில் போர் நடத்தியபோது ஆற்காட்டுக் கோட்டைக்குள் சிக்குண்டு கஷ்டப்பட்ட கிளைவின் ஆங்கிலேயர் பட்டாளத்துக்கு இந்திய சிப்பாய்கள் சோற்றை அவர்களுக்குக் கொடுத்துவிட்டுக் கஞ்சியைக் குடித்து உயிர் வாழ்ந்து ஆங்கிலேயர்களை உயிர் பிழைக்கச் செய்ததினால், இன்று கஞ்சியே குடித்துவந்தால் போதும் என்று வைத்துவிட்டார்கள் ஆங்கிலேயர்கள் தென்னாட்டாரை. தென்னாப்பிரிக்காவில் இருந்த ரொட்டியையும், சர்க்கரையும் காந்தியாருக்கு அல்லது அவரைப்போன்றாருக்குக் கொடுத்து விட்டு புல்லினால் செய்த உணவைத் தயாரித்து உண்டு வாழ்ந்து வந்ததினால், தென்னாட்டார் புல்லையும், புளியையும் தின்று வாழலாம் என்று கூறுகிறார் தோழர் காந்தியார்.

தென்னாட்டார் தமிழர்கள் இரக்கங் காரணமாக பரந்த நோக்கத்துடன் தன்னைப்போலல்லாமல், தன்னைவிட மேலாக மற்றவர்களை நேசிப்பதினால் வந்த விளைவுதான் இவைகள்-இன்று தமிழர்கள் கிள்ளுக்கீரைபோல் மதிக்கப்படுகிறார்கள்.

மற்றும், தோழர் காந்தியார் பழத்தையும் கிழங்கையும், மிளகாயையும், தேங்காயையும், கீரையையும் தின்று வாழலாம் என்று கூறுவதை, இன்று அவைகள் விற்கப்படும் விலைகளை நோக்கும் போது சாதாரண மக்கள் வாங்கித் தின்ன முடியுமா? அரிசியை விட அவைகள் பல மடங்கு அதிக விலையல்லா விற்கப்படுகின்றன? அரிசி யுத்தத்திற்கு முன்னிருந்த விலையைவிட மூன்று மடங்கு அதிக விலைக்கு விற்கப்படுகிறதென்றால், தேங்காயோ, பழமோ, புளியோ, கிழங்கோ நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிக விலைக்கு அல்லவா விற்கப்படுகிறது? எதை எடுத்தாலும் யானை விலை, குதிரை விலையாக விற்கும்போது கிழங்கையும் பழத்தையும் தின்று வாழ்வது எங்ஙனம்? ஆகக்கூடிய காரியமா?

ஆகவே தமிழ் நாடு இனி மானத்துடன் வாழவேண்டுமானால், தனி நாடாக விளங்கி, தனது தேவைகளைதானே தேடிக் ...சக்தி பெற்றாகவேண் ... அப்பொழுதுதான் தமி...கள் இழிவு படுத்தப்படுவதிலிருந்து விடுபட முடியும். தமிழர் சிறிது தமது அறிவை அடகு வைக்காமல் சிந்தித்துப்பார்த்து நல்லதோர் முடிவுக்கு வரவேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

தமிழிசைக் கழகமா? தெலுங்கிசைக் கழகமா?

தமிழர்களின் கலை, மொழி, நாகரிகம் முதலியவைகள் அழிக்கப்பட்டு வருவதைக்கண்டு மனம் நொந்து, இப்பொழுது தமிழர்கள் கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள். இத்துறைகளில் எல்லாம் தமிழிசைத் துறையானது மிக மிகமோசமான நிலையையடைந்து வருவதைக் கண்ணுற்ற ராஜாசர் அவர்களும் சர். ஆர். கே. ஷண்முகம் அவர்களும் தமிழிசைக் கிளர்ச்சியைத் துவக்கினார்கள். தமிழிசை மாநாடுகள் நடத்தினார்கள் தமிழ் நாட்டில் தமிழ் பாட்டுக்களை பாடவேண்டும், தமிழ் பாட்டுக்களுக்கே ஆக்கம் தரவேண்டும் என்று முழக்கஞ் செய்தனர். வாதப்பிரதி வாதங்கள் நடந்தன கண்டனங்கள் நடந்தன. மறுப்புக் கூட்டங்கள் பல நடந்தன பெரும் புயல் அடித்து, மழையும் பொழிந்து ஒருவாறு ஓய்ந்தது. இப்பொழுது நாடெங்கும் தமிழிசைக் கழகங்கள் நிறுவி, தமிழ் பாட்டுக்கள் பாடவும், தமிழ் பாட்டுக்கள் பாடாமல் போனால், தமிழ் நாட்டில் இசைக் கச்சேரி நடத்த முடியாது என்ற நிலைமை ஏற்படவும் ஆயிற்று. தமிழில் கீர்த்தனங்கள் இல்லை யென்ற குறையில்லாமல் அண்ணாமலை பல்கழகத்தார். தமிழ்க் கீர்த்தனங்கள் இயற்றி அச்சிட்டுள்ளார்கள் ஓரளவுக்கு தமிழிசைத் துறையில் புரட்சி தோன்றி தமிழிசை புத்துயிர் பெற்றிருக்கிறதென்றே கூறலாம்.

சென்ற இரண்டு மாதங்களுக்கு முன், 'சென்னையில் நடைபெற்ற 'பாரதிதாசன் பொற்கிழியளிப்பு' விழாவில், பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் 2 மணி நேரத்திற்குமேல் தமிழிசைக் கச்சேரி நடந்தது. "இசை மணி" தண்டபாணி தேசிகர் அவர்கள் தமிழ்ப் பாடல்களையே பாடினார்கள். அதுவும் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இயற்றியபாடல்களையே பாடினார்கள். கடல்போல் கூடிய மக்கள் கூட்டமும் உள்ளம் குளிர்ந்தனர். இவையெல்லாம் எதைக் காட்டுகிறது? தமிழிசை புலகில் மறு மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காட்டவில்லையா? இந்நிலையைக் கண்ணுற்ற ஒருகூட்டத்தாருக்கு வயிறு எரிகிறது. தமிழர்கள் விழிப்புற்று விட்டார்களே என்பதைக்காண மனம் வேகிறது, எப்படியாவது இக்கிளர்ச்சியை யடக்கி தமிழர்களை பழய நிலையிலே வைத்துவிட முயற்சி செய்கிறார்கள் சூழ்ச்சி செய்கிறார்கள் இதில் நம் தமிழர்கள் சிக்கி விடுகிறார்களே என்பதைக்காண நாம் வருந்தவேண்டி யிருக்கிறது.

சேலத்தில் தமிழிசைக் கழகம் நிறுவப்பட்டிருக்கிறது என்றும் முதல் தமிழிசைக் கச்சேரி நடந்தது என்றும் ஒருசேதி வேறு பக்கத்தில் வெளிவருகிறது அதைப்பார்க்கும் போது, தமிழிசைக் கழகம் என்பதற்குப் பதிலாக தெலுங்கிசைக் கழகம் என்று அழைப்பது தான் பொருத்தமானதாக யிருக்குமென்று கருத வேண்டியிருக்கிறது. ஏனெனில், முதல் நாள் கச்சேரியிலே தெலுங்குப் பாட்டுக்களை அதுவும் தேசிகரைக்கொண்டே பாடச் செய்திருக்கிறார்கள் என்பதனாலேயாகும் உயர்ந்தக் கருத்துக்களை மக்களுக்கு விளக்குவதற்கு, வசனம், கவிதை, நடிப்பு, முதலியவைகளில் ஒன்று இசையின் மூலமாக கருத்துக்கள் விளக்கப்பட வேண்டுமென்பது தான் நோக்கம் இந்த முறையில் அந்தந்த மொழியில் இசைத்தால் தான் நோக்கம் நிறைவேற முடியும் அதை விட்டு விட்டு தமிழ் மக்கள் கூடியுள்ள கூட்டத்தில் தெலுங்கிலோ மலையாளத்திலோ, கன்னடத்திலோ பாடினால், நோக்கம் நிறைவேறுமா? இதனால் பயன் என்ன? சிந்திக்க வேண்டாமா தமிழிசைக் கழகங்களை நிறுவுகிறவர்கள்? ஆத்திரம் கொள்வதில் பயனில்லை தமிழிசைக் கழகம் என்று பெயர் வைத்துக்கொண்டு தெலுங்கில் பாடச்செய்வது அழகா? தமிழிசைக் கழகம் என்ற பெயருக்கே இழுக்கல்லவா இது! சேலம் தமிழிசைக் கழக மாநாடு கூட்ட வேண்டுமென்று அன்றொரு நாள் தோழர் S. C. ரங்கசாமி பிள்ளை ஆரம்பித்தார் என்றும் பின்னர் தோழர் கஸ்தூரி பிள்ளை அவர்களின் முயற்சினால் ஷை கழகம் நிறுவப்பட்டதென்றும் அறிகிறோம் இம்முயற்சி வரவேற்கக் கூடியது தான் ஆனால், இவ்வாறு தமிழிசைக் கழகம் என்ற பெயரால், ஷை கிளர்ச்சிக்கு அழிவைத் தேடுவது என்பதைக் காணும்போது வருந்தாமல் இருப்பதற்கில்லை. எனவே. இனியாவது ஷை கழக நிர்வாகிகள் இத்தகை அழிவு வேலைக்கு இடம் கொடுக்காமல் உண்மையான தமிழிசைக்கு ஆக்கம் தேட முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

மதுவிலக்கை

ஆதரிக்க

உதவுங்கள்

தமிழிசைக் கழகம்

சேலத்தில் தமிழிசைக் கழகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது ஷை கழகத்திற்கு சேலம் நகரசபைத் தலைவர் தோழர். இரத்தினம் பிள்ளை தலைவராகவும் தோழர்கள் கணேசசங்கரன், A. இராமலிங்கம் காரியதரிசிகளாகவும் தோழர் கஸ்தூரி பிள்ளை பொருளாளராகவும் இருந்து வருகிறார்கள்.

இக்கழகத்தின் ஆதரவில் சென்ற 29—9—46ல் சேலத்தில் சேலம் ஜில்லா கலெக்டர் அவர்கள் தலைமையில் தோழர் தண்டபாணி தேசிகர் அவர்களைக் கொண்டு முதல் தமிழிசைக் கச்சேரி நடத்தப்பட்டது. ஏராளமான அதிகாரிகளும், பிரமுகர்களும் நம் தோழர்களும் வந்திருந்தார்கள்.

தலைவர்கள் பேசுகையில், தமிழ் பாட்டுக்கள் மட்டும் பாடவேண்டும் என்ற நோக்கம் இல்லாமல் தெலுங்குப் பாட்டும் பாடலாம் என்ற கொள்கையைக் கைகொள்ளவேண்டும் என்றும், அப்பொழுதுதான் தமிழிசைக் கழகம் வளர்ச்சியடைய முடியுமென்றும் குறிப்பிட்டார்.

இதன்பேரில் தோழர் தேசிகர் அவர்கள், கச்சேரி முழுவதிலும் தெலுங்கு பாட்டுக்களையே பெரும்பாலும் பாடி தமிழிசை கழகத்தின் முதல் நாள் கச்சேரியை முடித்துவைத்தார். இதைக் கவனித்துக் கொண்டிருந்த தமிழர்கள் மனம் துடித்தது; இரத்தம் கொதித்தது. தமிழிசைக் கழகம் என்ற பெயரால், இத்தகைய கொடுமை நிகழ்கிறதே யென்று வயிறெரிந்தனர். தெலுங்கிலே கச்சேரி நடத்துவதுதானா தமிழிசை? என்று கேள்விச் சீட்டுக்களும் தலைவர்களுக்கு கொடுக்கப்பட்டன. பதில் இல்லாததாலும் தமிழ்ப் பாட்டுக்கள் பாடாததாலும், தமிழ்த் தோழர்கள் கச்சேரியை விட்டு வெளியேறினார்கள் ரோஷத்துடன். இத்தகைய காரியம் நடக்காமல் பார்த்துக்கொள்வார்களா ஷை கழக நிர்வாகிகள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"ஆட்டுக் குட்டிகள் பசம்புல் மேய்
கின்றன
குருவிக் குஞ்சுகள் கூட்டில்
கொஞ்சுகின்றன,
மான்குட்டிகள் நிழலோடு ஆடுகின்றன
நாள்—மலர்கள் நறுமணம் வீசு
கின்றன,
ஆனல், ஐயோ! இளங் குழந்தைகள்
மனங் கசிந்து அழுகின்றனரே!
சுதந்திரம் வாழும் இந்த நாட்டிலே,
பிறர் விளையாட, இவர் அழுகின்ற
னரே!"

—பிரேஎலிங் தேவி

இப்பொழுதாவது புரிகிறதா?

சமுதாயத் துறையில் நாம் வடநாட்டுக்கு அடிமையாயிருந்து வருகிறோம்; அரசியல் துறையிலும் அடிமையாய் இருந்து வருகிறோம். பொருளாதாரத் துறையிலும் வடநாட்டு ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. இங்குள்ள தொழிற் நிலையங்களையெல்லாம் அவர்கள் கைப்பற்றி வருகிறார்கள். இதற்குத் துணைபுரிய இந்நாட்டிலுள்ள பத்திரிகைகளையெல்லாம் விலைக்கு வாங்கி தங்களாதிக்கத்திற்குட் படுத்தி வருகிறார்கள். தென்னாடு—தமிழ் நாடு உண்மையிலே உயிர்வாழ வேண்டுமானால், வடநாட்டு ஆதிக்கத்தினின்று விடுபடவேண்டும் என்றும் கூறி வந்தோம். சிலருக்கு இது கேலியாகத் தெரிந்தது. துவேஷத்தின் காரணமாக கூறுவதாக நம்மைக் குறைகூறி வந்தார்கள். அத்தகையவர்கள் இப்பொழுது திருப்பூரில் 1-10-46ல் நடந்த உமன்லால் காதி வித்யாலய திறப்பு விழாவில் சென்னை சர்க்கார் உணவு மந்திரி தோழர் **ராகவ மேனன்** கூறியிருப்பதைக் கவனிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்,

அதாவது:

"சென்னை மாகாணத்தில் தற்போதுள்ள நூற்கும் மில்லுகளில் கதிர்களை அதிகரிக்கவோ, நூற்கும் மில்லுகளைப் புதிதாக ஆரம்பிப்பதற்கோ அனுமதியளிக்கப்பட மாட்டாது"

"இதுவே சென்னை சர்க்காரின் கொள்கை"

என்று குறிப்பிட்டிருக்கிறார். அறிவுள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும் இதனை.

தென்னாட்டார்—திராவிட மக்கள் உடலுழைப்பிலே சிறந்தவர்கள்; பிறர் உண்டு கொழுக்க ஓயாது உழைத்துப் போடுவதில் சலிக்காதவர்கள்; இலங்கை, பர்மா, மலாயா, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளில் மலைகளிலும் காடுகளிலும் கனிகளிலும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு பொன் விளையச் செய்பவர்கள், அதனால், வடநாட்டான் உல்லாச வாழ்வு வாழ என்றும் உடலால் உழைத்துப் போடுவார்கள் என்று எண்ணியிருக்கிறார்கள் போலும் வடநாட்டினர். வடநாட்டுத் தலைவர்களைத் திருப்திப் படுத்தினால் தான் தங்கள் வாழ்வு நிலைக்கும் என்ற ஒரே காரணத்தினால், தென்னாட்டு மக்களின் நலன்களையெல்லாம் பலியிட்டு வருகிறார்கள் இந்நாட்டில் 'அரசபுரியும் காங்கரஸ் மந்திரிகள்' என்று எண்ணுவதைத் தவிர வேறு என்ன கருத முடியும்?

ஏன் இவ்வாறு கூறுகிறோமென்றால், இந்தியாவில் துணி உற்பத்தியைப் பெருக்க இந்திய சர்க்கார் தீவிர முயற்சிகள் எடுத்து வருகின்றனர். ஒரு நாளைக்கு மூன்று ஷிப்டுகள் ஏற்படுத்த வேண்டும் என்று மில் நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் புதிது புதிதாக இயந்திரத் தொழிற்சாலைகளை நிறுவ பெரும் பெரும் திட்டங்கள் வகுத்திருக்கின்றனர். இந்தியாவுக்கு எவ்வளவு சீக்கிரத்தில் எந்த நாட்டிலிருந்து எவ்வளவு இயந்திர சாதனங்களை வரவழைக்கலாம் என்பதுபற்றி அறிந்துவர இந்திய கைத்தொழில் இலாகா தூதுகோஷ்டியொன்றை இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் அனுப்பியுள்ளார்கள். உடனடியாக துணி உற்பத்தியை ஆதரிக்க ஆமதாபாத் ஆலைகளுக்கு 20000 டன் நிலக்கரியைத் தனியாக வழங்குவதாக இந்திய சர்க்கார் உறுதி கூறியிருக்கிறார்கள்.

இவைகளைப் பார்த்தால் இந்திய சர்க்கார் இயந்திரங்களை—மில்களை பெருக்குவதிலும் மில்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதிலும் எவ்வளவு கவலையாயிருக்கிறார்கள் சென்னை மாகாண காங்கரஸ் சர்க்கார் எவ்வளவுதூரம் கவலையற்றவர்களாகயிருக்கிறார்கள் என்பதும் விளங்கும் என்றே கருதுகின்றோம், அதுமட்டுமல்ல, இவர்கள் இப்பொழுது கொண்டுள்ள மனப்போக்கும் கொள்கையும் எவ்வளவு அபாயகரமானது, இந்நாட்டின் பொருளாதார நிலையை எவ்வளவுதூரம் பாதிக்கும், வடநாட்டுக்கு எவ்வாறு அடிமைப்படுத்தி வைக்கும் என்பதை பொதுமக்கள் உணரவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

சென்னை சர்க்கார் மேற்கொண்டுள்ள குடிசைத் தொழிலை அதாவது நூல் நூற்றல், போன்ற குடிசைத் தொழிலை வளர்க்க இத்தகைய கொள்கையை அனுஷ்டிப்பதாகக் கூறலாம். வடநாட்டில் மட்டும் இயந்திரத்தினால் நூல் நூற்று, நெய்து, துணி உற்பத்தியை பெருக்கி பொருளீட்டுகையில் தென்னாடு மக்கள் மட்டும் கையினால் நூல் நூற்று ஓயாது உழைத்து அரை வயிறும் கால் வயிறுமாக யிருந்து என்றும் வறுமையிலுழன்று தவிக்க வேண்டுமோ?

குடிசைத் தொழில்தான் இந்நாட்டில் இருக்கவேண்டும் இயந்திரத் தொழில் இருத்தல் கூடாது என்பது காங்கரசின் பொதுவான கொள்கையாயிருக்குமேயானால், இந்திய காங்கரஸ் சர்க்கார் இயந்திரத் தொழில் பெருக்கவும் சென்னை காங்கரஸ் சர்க்கார் குடிசைத் தொழிலை பெருக்கவுமான ஒன்றுக்கொன்று முரணான திட்டங்களை பின்பற்ற வேண்டிய அவசியமிருக்காதல்லவா? எந்தப்படி பார்த்தாலும், வடநாட்டுத் தலைவர்களுடைய நற்பதிப்பைப் பெறவும், காந்தியாரின் ஆசியைப்பெறவும், வடநாட்டு மில் முதலாளின் தயவைப்பெறவும் சென்னை சர்க்கார் இத்தகைய கொள்கையைப் பின்பற்றுகிறார்கள் என்பது நன்கு விளங்கும். ஆகவே, தென்னாட்டு மக்கள், திராவிட மக்கள் இந்தச் சமயத்தில் ஏமாந்து போக… சர்க்காரின் கண்மூடித்தனம… கையைக் கண்டித்துக் கிளர்ச்சி ம… இக்கொள்கையைக் கைவிடுமாறு தூண்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். அன்று ஆரிய போதையில் மயங்கிக்கிடந்ததினால் தான் நம்நாடு இன்று சமுதாயத்தில் இவ்வளவு இழிவான நிலையிலிருக்கிறோம் இன்று தேசிய போதையில் மயங்கிக் கிடப்போமேயானால், அரசியலிலும், பொருளாதாரத்திலும் என்றென்றும் தலையெடுக்க முடியாதவாறு அடிமையாயிருப்போமென்பதை இப்பொழுதே எச்சரிக்கிறோம் சிந்திக்கும் ஆற்றலுள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும் வடநாட்டு ஆதிக்கத்தினின்று தென்னாடு விடுபட வேண்டியது எவ்வளவு அவசியமும் அவசரமுமான தென்பதை.

———

வகுப்பு ஒற்றுமைக்கு வழி

"தற்பொழுது நம் சென்னை மாகாணத்தில் குறுகிய நோக்கமுடைய சில விஷமிகள் இந்து முஸ்லிம் சகோதரர்களிடையே தொன்று தொட்டு இன்று வரை நிலவியிருக்கும் சகோதர மனப்பான்மையைக் குலைத்து விரோத மனப்பான்மையை, மூட்டி வருகிறார்கள்.

இது, மிகவும் வருந்தத் தக்கது.

தமிழ் நாட்டில் நிலவியுள்ள இந்து முஸ்லிம் சகோதர மனப்பான்மையைக் கண்டு வட நாட்டார் கூட பொறாமைப்பட்ட காலம் உண்டு.

இன்று துரதிர்ஷ்டவசமாக வட நாட்டு நிலை தென்னாட்டிலேயும் வீச ஆரம்பித்தது கண்டு கவலைப் படவேண்டியதாயுள்ளது."

என்று தஞ்சை ஜில்லா முஸ்லிம் லீக் பிரசாரகர் (பெரிய குளம்) ஜனாப் எம். அப்துற் ரஹிமான் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகைய கவலையைத்தரக்கூடிய நிலைமை கடந்த சில நாட்களாக தமிழ் நாட்டில் இருந்து வருவதை யாவரும் அறியாமல் இருக்கமுடியாது. ரயிலில் போகும்போதும் பஸில் போகும் போதும் இரு சமுகத்தாரும் பேசும் … ஒரே குடும்பத… போல் வாழ்ந்துவரும் நாட்டி… துவேஷப் பிரச்சாரம் நடத்தப்பட்டு வருகிறது. உண்மையிலே பயப்பட வேண்டிய காரியமாகும் இது. நாட்டின் அமைதியிலும், மக்கள் உயிரிலும் கவலையும் பொறுப்புமுள்ள எவரும் இத்தகைய நிலைமையை வளர விட மாட்டார்கள் என்றே கருதுகின்றோம். இந்தச் சமயத்திலாவது தோழர் அப்துற் ரஹிமான் போன்றவர்கள் எச்சரிக்கமுன்வந்தது கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

நாட்டிலே ஒருவருக்கொருவர் துவேஷத்தையும் பகையையும் வளர்ப்பதும் அதற்கு தூபம் போடுவதும், இந்த வேலையில் வரவேற்கக் கூடிய காரியமாகாது. அன்னியன் வெளியேறும் நேரத்தில், நம்மை நாமே ஆண்டுகொள்ளப்போகும் நேரத்தில் நமக்குள் பகைமைத் தீயைமூட்டி விடுவது எவ்வளவு அபாயகரமானது, அன்னியனுக்கு எவ்வளவுதூரம் இடமளிப்பதாகும் என்பதை ஒவ்வொருவரும் கவனத்தில் வைக்கவேண்டும். நமக்குள் ஆயிரம் பகையிருந்தாலும் அன்னியனுக்கு இடம் கொடுத்தல் கூடாது. மனிதனை மனிதன் பகைக்கக் காரணமென்ன? அவன் அவன் தன்தன் கொள்கைகளின்படி பயமில்லாமல் வாழ பிறந்துவிட்டால் பகை கொள்ள இடமேது, ஒவ்வொருவரும் விரும்புவதுஎன்ன? அவரவர்கள் கொள்கைஎன்ன? என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டால் பகைத்துக் கொள்ள இடமே ஏற்படாது. முஸ்லிம்கள் கோருவது என்ன? இந்துக்கள் கோருவது என்ன? தென்னாட்டிலுள்ள இந்து முஸ்லிம்களின் நிலை என்ன? என்பதை பொது மக்கள் நன்கு உணரும்படி இருவகுப்பைச் சேர்ந்த பொறுப்புள்ள தலைவர்கள், தொண்டர்கள், பத்திரிகைகள் விளக்க வேண்டியதுதான் முக்கிய பணியாகும். இதனைச் செய்ய முன்வருவார்களாக.

வம்பை விலைக்கு வாங்கப்போகிறாரா?

சென்னை மாகாணத்தில் அரசுபுரியும் காங்கரஸ்காரர்கள் செய்யும் சில காரியங்களையும் பேசும் பேச்சுக்களையும் பார்த்தால் வம்பை விலைக்கு வாங்கப் பார்க்கிறார்கள் என்றே கருத வேண்டியிருக்கிறது.

அன்று ஆச்சாரியார் மந்திரிசபை காலையில், இந்திமொழியைப் கட்டாய பாடமாக்கி இம்மாகானத்தில் கூபரும் போராட்டத்திற்கு இடங் கொடுத்து பலரை சிறையிட்டு தொல்லைகொடுத்து வந்தார்கள்.

இந்தி மொழியைப் படிப்பதில் யாருக்கும் ஆட்சேபனையில்லை, கட்டாய படுத்தக்கூடாது என்று கூறிவந்தோம் தாய்மொழியையே சரியாக எழுதப்படிக்க 100க்கு 8 பேருக்கும் தெரியாத நிலையில், வேறு மொழியைக் கட்டாய மொழியாக புகுத்துவது நேர்மையல்ல மீண்டும் மீண்டும் ஒழிந்த சனியனை இழுப்பதாகச் சொல்வது வம்பை விலைக்கு வாங்குவதாகத்தான் முடியும் என்று எச்சரிக்கிறோம்.

நாமக்கல் கவிஞர் நாவன்மை

(ஓர் அரிய ஆராய்ச்சி நூல்)

ஆசிரியர்:—

திருவத்திபுரம். மாவண்ணா. தேவராசன்.

தனிப்பிரதி வேண்டுவோர் ரூ. 1—0—0 மணியார்டர் செய்தால் தாபால் செலவின்றி அனுப்பப்படும்.

விவரங்கட்கு:—

ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம்,
திருவத்திபுரம், (வ. ஆ.)

... தக்கள் ... பொருத் தொகுதி முறையைக் கைக்கொண்டால் சரியான பிரதிநிதித்துவம் பெற முடிவதில்லை; அதனால் தங்கள் சமூக நலன்கள் பாதுகாக்கப்படுவதற்கில்லையென்று கூறுகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறுவதற்கு காரணம் இல்லாமல் இல்லை தங்கள் நலன்கள் பாதுகாக்க முடியாது என்று அஞ்சுவதற்கு மிடமில்லையென்று சொல்லுவதற்கில்லை.

சென்ற 1861-ம் வருஷத்திலும் அதற்கும்பின், 1884-ம் வருஷத்திலும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பிறப்பித்த சட்டங்களின் மூலமாக இந்தியப் பிரதிநிதிகளுக்கு வைஸ்ராய் கௌன்ஸிலில் இடமளிக்கப்பட்டன.

வைஸ்ராய் கௌன்சிலுக்கும் மாகாண கௌன்சில்களுக்கும், ஜில்லா போர்டு, முனிசிபல் முதலிய ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் மிகச் சுருங்கிய முறையில் பிரதிநிதிகள் தெரிந்தெடுத்து அனுப்பும் உரிமைகளும் கொடுக்கப்பட்டன. இந்த உரிமைகளின்படி மேற்படி ஸ்தாபனங்களுக்குத் தனித்தொகுதியான முஸ்லிம்களும் ஷெட்யூல்டு வகுப்பார்களும் பிரதிநிதிகளாய் வர முடியாமல் போய்விட்டது. இந்துக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் அதாவது அவர்களது ஆதரவு இல்லாமல் பிரதிநிதிகளாக வருவது முயற்[illegible] யிருந்தது. இவ்வொத்[illegible]யைப் பெறுவதற்கு முஸ்லிம் தலைவர்களும் மற்றவர்களும் மிகக் கஷ்டப்பட வேண்டியிருந்தது, அவ்வாறு கஷ்டப்பட்டாலும் புறக்கணிக்கப்பட்டே வந்தார்கள்.

பொதுத்தொகுதி முறையிருந்தால் தங்களுக்கு நியாயமான பிரதிநிதித்துவம் கிடைக்காது என்பதையுணரலானார்கள் முஸ்லிம்கள். இந்நிலையிலே, 1907 ஆம் வருடத்தில் 'மின்டோ மார்லி' சீர்திருத்தம் சம்பந்தமான பேச்சுவார்த்தை ஆரம்பமாயிற்று. மசோதா தயாரிக்கப்பட்டது. அச்சமயத்தில் முஸ்லிம்கள், தாங்கள் கடந்த [illegible] ஆண்டுகளாகபட்ட கஷ்டத்தையும் அதனால் பெற்ற படிப்பினையையுங் கொண்டு தனித் தொகுதி அளிக்க வேண்டுமென்று கோரலாயினர். தனித்தொகுதி யளிக்கப்பட்டால்தான் தங்களுக்கு நியாயமான பிரதிநிதித்துவம் கிடைக்க வழி பிறக்கும் என்று வாதிட்டார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் இந்த கோரிக்கை நியாயமானதென்பதையுணர்ந்து இதற்கு ஒத்துக்கொண்டார்கள். அதிலிருந்து முஸ்லிம்களுக்குத் தேர்தல்களில் தனித் தொகுதி முறை அமுலில் இருந்துவரலாயிற்று.

இதற்கிடையில், நாட்டிலே காங்கரஸ் மகா சபையும் முஸ்லிம் லீகும் வேலை செய்து வந்தன. முன்னது 1885லும், பின்னது 1906லும் நிறுவப்பட்டு வருடா வருடம் கூடி நாட்டு முன்னேற்றத்திற்கான பல தீர்மானங்களை நிறைவேற்றி வந்தனர். இரண்டு ஸ்தாபனத்தின் தலைவர்களும், இந்து முஸ்லிம் ஒற்றுமையில்தான் இந்தியாவின் விடுதலை இருக்கிறதென்பதாக [illegible]ணர்ந்து இதற்கான காரியங்களைச் ... தங்கள் கவனத்தைச் [illegible] வந்தனர்.

1913ல் கராச்சியில் கூட்டிய காங்கரஸ் மகாசபைக்குப் பிறகு இது விஷயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. காங்கரஸ் மகா நாட்டையும் முஸ்லிம் லீக் மகா நாட்டையும் ஒரே இடத்தில் கூட்டி இதற்கான ஒரு முடிவைக்காண வேண்டும் என ஜனாப் ஜின்னா அவர்கள் உண்மையாகவே பெரு முயற்சியை எடுத்துக்கொண்டார். இதன் பயனாக, 1916ல் டிசம்பரில் லக்னோவில் லக்னோ ஒப்பந்தம் என்ற பெயர் பெற்ற ஒப்பந்தம் ஏற்பட்டு இருதாப்பினரும் கையெழுத்திட்டனர். ஆனால் பிரிட்டிஷ் பார்லிமெண்டார் இவ்வொப்பந்தம் நிறைவேறுமல் என்னென்ன செய்யவேண்டுமோ அவ்வளவையும் செய்தனர். இதற்குப் பிறகுதான் **மாண்டேக் செம்ஸ் போர்டு சீர்திருத்தம்** தோன்றியது.

இதுவரை காங்கரஸ் மகா சபையானது இந்திய மக்களனைவரது பொதுவான அரசியல் ஸ்தாபனமாகவே கருதப்பட்டு வந்தது. பல காங்கரஸ் மகா சபைக்கூட்ட மாநாடுகளில் முஸ்லிம் பெரியார்கள் தலைமைதாங்கியிருக்கிறார்கள். இதை யாரும் மறந்துவிடக்கூடாது. இவ்வாறு மக்கள் மனப்பான்மை யிருந்துவந்த வேளையில்தான், தோழர் காந்தியார் காங்கரஸ் மகா சபையில் காலடிவைத்தார். அவர் என்று காலடி வைத்தாரோ அன்று முதலே காங்கரசின் சரித்திரம் தனியாக பெயர்த்து எழுதவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. அரசியலிலே மதத்தைப் புகுத்தலானார். இந்து மத தர்மம் காங்கரசில் தலைகாட்டலாரம்பித்தது. இதனாலும் முஸ்லிம் தலைவர்கள் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கான பல திட்டங்கள் தயாரித்து காங்கரசிடமும் தோழர் காந்தியாரிடமும் கொடுத்துவந்தனர். இவைகள் நிராகரிக்கப்பட்டே வந்தன.

இறுதியாக டில்லியில் 1927ல் கூடிய முஸ்லிம்கள் சில திட்டங்கள் வகுத்தனர். அதே யாண்டில் சென்னையில் நடைபெற்ற காங்கரஸ் மகாசபையும் அத் திட்டங்களை ஒப்புக்கொண்டது. இத் திட்டங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டதின் பயனாக, லீகும் காங்கரசும் இரு கமிட்டிகள் நியமித்தன. இவ்விரு கமிட்டிகளும் கூடி இந் நாட்டின் அரசியல் திட்டங்கள் பற்றி ஒரு அறிக்கை தயாரித்து பிரிட்டிஷ் சர்க்காரிடம் அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இம் முடிவுக்கேற்ப அவ்விரு கமிட்டிகளும் கூடித் தங்கள் வேலைகளைச் செய்ய ஆரம்பித்தன. இந்த வேளையில் **'நேரு யதாஸ்து'** என்ற "பாம்" விழுந்தது. எல்லாவற்றையும் குட்டிச் சுவராக்கியது. இவ்வளவு கஷ்டப்பட்டு செய்த முயற்சிகள் எல்லாம் இந்த 'பாம்' வீச்சினால் சிதறடிக்கப்பட்டுவிட்டது. இந்த பாம் உற்பத்திக்குக் காரண கர்த்தா 'மகாத்மா' காந்தியாராகும் இத்துடன் இந்து முஸ்லிம் ஒற்றுமைப் பேச்சு தகர்ந்துவிட்டதென்றே கூறலாம், இதிலிருந்து கூறுங்கள் யார் குற்றவாளியென்பதை?

(தொடரும்)

5-ம் பக்கம் தொடர்ச்சி

கொற்றமும் நிறையுனரகப் பொருட்கோவையிற் கூறப்படுகின்றது. மாந்தையென்பது மாதோட்டத்துக்குச் சமீபத்தேயுள்ள வூர். மணற்றி என்பது யாழ்ப்பாணம். இது மணல்நாடு என்றும் ஒருகாலம் வழங்கப்பட்டது. இலங்கையரசர் பாண்டியரோடும் சோழர்களோடும் எதிர்பொருதற்கு இஃதொரு காலம் போர்க்களமாகவுமிருந்தது. இதன் பகுதிகளுளொன்று இன்னும் சளபூமியென்னும் பெயரால் வழங்கும்.

மாந்தையிலும் மணற்றியிலும் கிறிஸ்தாப்தத்துக்கு முன்னே 103ம் வருஷத்தில் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. அதிலே பாண்டியர் வாலகம்பாகுவைப் புறங்கண்டு அவன் மனைவியையும் புத்த பாத்திரத்தையும் கவர்ந்து கொண்டேகியதோடு ஈழ நாட்டையும் தமதடிப்படுத்திப் போயினர் என 'மகாவம்சங் கூறுகின்றது.

இன்னுந் சிலப்பதிகாரத்துக் குரை செய்த அடியார்க்கு நல்லாரும் ஈழ நாட்டாரெனப்படுவார். அவர் குணபூஷண சிங்காரிய ராஜாவுக்கு மந்திரியாயிருந்து ஈழ நாட்டில் அநேக தரும ஆலயங்களும் வித்தியாசாலைகளும் ஸ்தாபித்தவர். அவர் அமைப்பித்த திருக்குளம் இன்றுமுளது. அஃது "அடியார்க்கு நல்லார் குளம்" என வழங்குகின்றது அது வண்ணைச் சிவாலயத்துச் சந்நித் தெருவிலுள்ளது. அதற்யலிலே அவர் தமது அரசன் பெயராலே அமைப்பித்த குளம் "ஆரிய குளம்" என இக்காலத்து வழங்குகின்றது. அவர் இருந்த மனை நிலமும் அவர் பெயராலே வழங்குகின்றது. அவர் காலததிலே தமிழ் யாழ்பாணத்திலே மிக விருத்தி பெற்றது. அவரே அறுபத்து மூன்று நாயன்மாருக்கும் ஆலயமும் பூசைக்கு நிபந்தமும் யாழ்ப்பாணத்தில் முதன் முதல் வகுத்தவர். இவ்வாலயமிருந்த இடம் "நாயன்மார் கட்டு" என இன்றும்வழங்குகின்றது

முதிரம், மாந்தை என்றும் பெயர்களையும் தம்பிக்கு அஞ்சிக் காடுகொண்டிருந்த ஸ்ரீ சங்கபோதியினது சரித்திரத்தையும் நோக்கும்போது

"அந்த நாள் வந்திலை
யருங்கவிப் புலவோய்
இந்த நாள் வந்து நீ நொந்
தெனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த்
தம்பினைக் கொடுத்ததன்
விலைதனை மீட்டுன் வறுமை
நோய்களையே"
"பெய்யுங் காலை வெகும்பி
விழுஞ்சிரம்
செம் பொன் கோடி
விலை வெனச் சிந்தித்தான்
உம்பர் நாடு முலகினுந்
தேடினும்
எம்பி போலெமக்
கியாவரினியரே."

எனக் கூறிய குமணனும் ஈழ நாட்டினுள்ளான் எனத் துணிதற்கிடமாகின்றது. ஸ்ரீ சங்க[illegible]ாதியினது இயற்பெயர் குமணன் [illegible]லும்! மகாவம்சத்திலே கூறப்பட[illegible] ஸ்ரீ சங்கபோதி சரித்திரமும் புறநானூற்றிலும் பிறவற்றிலும் வரும் குமணனும் அவர் காலமும் பெரிது மொத்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலேயுள்ள செம்பியன் பற்று, பல்லவராயன் கட்டு, தொண்டைமானாறு, பாண்டியன் மூழ்வு முதலிய இடப் பெயர்களை நோக்குமிடத்துத் தமிழ் நாட்டு வேந்தர்கள் யாழ்ப்பாணத் தொடர்ப்புடையராயிருந்தாரென்பது நன்கு துணியப்படும்.

இன்னும் மாதோட்டத்துக்குத் தெற்கேயுள்ள குதிரை மலை மிக்க பழமையையும் யவனதேசம் வரையும் பரந்த கீர்த்தியு முடையது. அஃதொரு காலம் சிற்றரசர்க்கு இருக்கையாயுமிருந்தது. இதற்குத் தலைவராயிருந்தசி ற்றரசருள்ளே எழினியும் பிட்டங் கொற்றனும் புற நானூற்றிற் பாடப்பட்டோர்.

இங்ஙனம் வருமேதுக்களால் தமிழ்ச் சங்கப் புலவருள் ஒரோ ஒரு சிலர் ஈழ நாட்டுப் புலவராதல் வேண்டும் எனவும், தமிழ் சங்கப் புலவராற் பாடப்பட்டாருள்ளும் ஒரு சிலர் ஈழ நாட்டாராதல் வேண்டுமெனவும் அவரே ஈழ நாட்டிலே முதலில் தமிழ் வளர்த்தவராதல் வேண்டுமெனவும் அனுமிக்க இடமாகின்றது.

சலகண்டாபுரம் பகுத்தறிவு நடிகர் கழகத்தாரால்

தலைவர் **பெரியார்**

தளபதி **அண்ணாத்துரை**

கவியரசர் **பாரதிதாசன்**

ஆகியோர் முன்னிலையில் நடத்தப்பட்டு, மூவரின் பாராட்டையும் பெற்ற முதன்மையான நாடகம்; பழங்கால இனப்போரைக் குறிக்கும் பகுத்தறிவுச் சித்திரம் சுவையுள்ள பேச்சும் பாட்டும் நிறைந்த கருத்தோவியம்.

வீரவாலி

(ஆக்கியோன் : ப. கண்ணன்)

அழகிய புத்தகமாக அச்சாகிக்கொண்டிருக்கிறது.

விரைவில் கிடைக்கும்.

விவரங்கள் :—குயில் நிலையம்,

581, மைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

1ம் பக்கம் தொடர்ச்சி

கட்டி அதன்பின்பு ஓர் ஆண்மகவு பிறப்பதாகவும், அந்த எழு தருமக் கோட்டைகளையும் அழித்து விட்டு பெண் ஜென்மம் (பாப ஜென்மம்) எடுப்பதாகவும் ஒருபுறம் கூறப்படுகிறது. அந்தோ! உலகம் என்னும் ரதத்திற்கு இரு சக்கரங்கள் போன்ற ஆணுக்கும், பெண்ணுக்குமிடையில் எவ்வளவு அபாரமும், அகம்பாவமும், அக்கிரமும், அய்யோக்கியத்தனமுமான வித்தியாசங்கள் கற்பிக்கப் பட்டிருக்கிறது பார்த்தீர்களா! 'பெண்ணுகிவந்ததொரு மாயப்பிசாசம் பிடித்திட்டென்னைக் கண்ணால் மருட்டுதே!' என்றொருவர் பாடிவைத்து விட்டார்! 'ஆலகால விஷத்தையும் ....நம்பலாம், சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தியங்குதவிப்பாரி' என்றார் ஒரு அறிவின் பெரியார்(?) 'ஐந்து பெண்களை பெற்றால் அரசனும் ஆண்டி யாவான்' [illegible]றொரு பழமொழி வழங்குகிறது '[illegible]ப்பூதம் பெண்களுக்கு படிப்பெதற்கு' என்கிறார் சில அசடர் 'பேதமையென்பது மாதர்க்கணிகலம்' என்றார் ஒரு விஷமி, இன்னும் நோக்குவோமாயின் எப்புறமும் நமக்கு இழிவே கற்பிக்கப்பட்டிருக்கிறதல்லால் எள்ளளவும் புகழ் கிடையா? "சுருங்கக் கூறினால் "ஆணுக்கு பெண் அடிமை" என்ற அசட்டுமனப்பான்மை இந்திய மக்களிடையே வேறூன்றிப்போய்க் கிடக்கிறது. அந்தோ! இந்திய சகோதரிகாள் உங்களுக்கு இந்நிலையிலும் கவலையற்ற ஈரமற்ற, ரோஷமற்ற நித்திரையோ? விழித்தப்பட்ட அடிமைப் படுகுழியினின்றும் வெளியேற மார்க்கங்காணாது உங்களுக்கு இன்னும் உறக்கமோ. சகோதரிகாள் விழியீர்களா? நம்மைப் பிணைத்திருக்கும் அடிமைச்சங்கிலியைத் துண்டு துண்டாய்த் தகர்த்தெறிந்து நாம் விடுதலை பெறுவண்ணம் போட்டிருக்கும் மூடநம்பிக்கைகள் என்னும் முள்வேலியை தட்டெரித்த 'வீரமுழக்கங்கொண்டு' சமத்துவப் பெரும்வரையில் சமதர்மப்போரில் சலியாதுழைப்போம்' எனக்கங்கணம்கட்டி "பட்டங்களாளவுஞ்சட்டங்கள் செய்யவும், பாரினிலே பெண்கள் வந்து விட்டோம்', என்னும் பொன்மொழியை மெய்ப்பித்து "தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டினிலே, என்னும் நன்னிலையெய்த இன்று முன்வர மாட்டீர்களா?

மேற்குறித்த விதமாய் நம்மை இழிவுபடுத்தும் ஈரமற்ற, சுயநல வஞ்சகக் கன்னெஞ்சத்தார்க்கு பெண்கள் பாபஜென்மங்கள், எழுதருமக்கோட்டைகளை அழித்து பிறக்கிறது பெண், என்னும் பாபிகளுக்கு 'எந்த எழு தருமக்கோபுரங்களை அழித்துப் பிறந்தது? புண்ணிய ஜென்மங்களான ஆண் எந்த எழு தருமக் கோட்டைகளைக்கட்டிப் பிறந்தது? இத்தகைய இமயமலையத்தனை உயர்வுள்ள ஆண்களாகிய நீங்கள் எந்த புண்ணிய ஜென்மத்தில் உதிரத்தில் ஊறிப்பிறக்கிறீர்கள்? எவர் மடியில் தவழ்கின்றீர்கள்? யாருடைய போஷிப்பில் வளர்ந்து வாலிபப் பருவத்தையடைகின்றீர்கள்? யாரை மணந்தின்புறுகிறீர்கள்? இப்பெருமையனைத்தும் சேர்வது பெண்பாலையேயன்றோ? பெண்களென்றவுடன் பாபஜென்ம பல்லவி பாடும் பண்டிதர்களே! பாப ஜென்மாகிய பெண், பாபஜென்மமாகிய பெண்வயற்றிலேயே பிறக்கிறது! ஆனால் புண்ணிய ஜென்மங்களாகிய நீங்கள் (ஆண்கள்) புண்ணிய ஜென்மமான எந்த ஆணின் வயிற்றில் பிறக்கின்றீர்கள்? எந்த ஆணிடம் பாலருந்துகிறீர்கள்? எடுத்ததற்கெல்லாம் சாத்திர நியாயதர்க்கம் பேசும், தர்க்க நாவல்லோரே! எழுதருமக் கோபுரங்களைக்கட்டி பிறக்கும் இமய இமயமலையத்தனை உயர்வுள்ள ஆண் ஜென்மங்களாகிய நீங்கள் எழுகோபுரங்களை இடித்துப்பிறக்கும் மாபெரும் பாப ஜென்மங்களாகிய பெண்கள் வயிற்றில் பிறப்பது எந்த நியாயத்தைக் கொண்டு, பெண்கள் உதிரத்திலேயே (கருப்பத்தில்) ஊறி வளர்வது எந்த நியாயத்தைக்கொண்டு இவற்றிற்குத் தக்க நியாயமாம பதில் தரும்படி உங்களை அழைக்கின்றேன்.

உலகானுபவத்தில், இல்லறவாழ்வில், பெரும்பங்கெடுத்துக் கொள்வோர் பெண்மணிகளே! ஒழுக்கத்தில் சிறந்தவர் அவர்களே! உலகானுபவ விர்த்திக்கு நாயகமணிகளாம் ஒளிதருபவர் பெண்களே! பொறுமைக்கிருப்பிடமாய்ப் பொலிபுரும் பெண்களே இவற்றை எவரே மறுக்கவல்லார்? பயனளியாது பாழாழ்க்கிளக்கும் பெருநிலத்தையொப்பர் ஆடவர் ஆனால் செழுமைக்கு பயிர்களைத் தாங்கி தானிய மணிகளை நல்கும் நன்செய் நிலங்களையொப்பர் பெண்டிர்! கனிதராது வறிதேநிற்கும் 'பாதிரி' மரத்தையொப்பர் ஆடவர்! மணந்தரு தீங்கனி நிறைமரமொப்பர் பெண்டிர்! இவற்றில் எது சிறப்புடைத்து? அறிஞரே! ஆராய்ந்துரைமின்! புகழ்மணக்கும் பெண்மணிகாள் இத்துணைப் பேற்றை இயல்பில் பெற்ற பெருமைசேர் பெருஞ் சமூகத்தவராகிய நீங்கள் இவை யொன்றையுங் கருதாது, அந்தகார இருளில் அழுந்தி ஆழ்ந்து நித்திரை செய்கின்றீர்களே! இது சரியோ?

அந்தோ! பொறுப்பும், சகிப்பும், தனி இனிப்பும் குடிகொண்டு "எம்கடன்பணி செய்து கிடப்பதே" என்று சமூக வாழ்வின் பேருபகாரிகளாய் விளங்கும் பெண்மக்களை, தாய்மார்களை, "பாபஜென்மங்கள், அடிமைகள். அறிவிலிகள், ஆண்மை 'பலம்' அற்றவர்கள், பேய்கள்," எனவைது, 'மக்கள் உயிரைக்கொள்ளை கொள்ளும் [illegible]ம் பிணியின், கொடியவர்களாக் மதித்து, "செய்கொண்டாரும் செங்கமலப்பாய் கொண்டாரும் பணியும் பட்டீச்சுரத் தானே!—நோய்கொண்டாலுங் கொள்ளலாம், நூறுவயதளவும் பேய்கொண்டாலும் கொள்ளலாம், பெண் கொள்ளலாகாதே" எனப்புலம்பி வைத்திருக்கும் செய் நன்றி கொன்ற ஆடவரின் மதிதானென்ன! அவர்களது உள்ளக் கிடக்கையின் கொடுமை தானென்ன! அந்தோ! கொடுமை! கொடுமை!! கொடுமையிலுங்கொடுமை!!!

பெண்டிராகிய நம்மை உயர்த்தி இமயமலையின் மேல்கொண்டு போய் விடக் கேட்கின்றோமா? அன்றி, "நாங்கள் ஆடவரிலும் மேலானவர்கள், ஆதலின், ஆடவர் எங்களுக்கு அடிமை பூண்டொழுக வேண்டுமென்று கூறுகின்றோமா? இல்லையே. அந்தண[illegible]க் கட்டுப்பாடுகளால் வனிதாசிரோன்மணிகள் வாடி வதங்க நேரிடுகிறது. அர்த்தமற்ற அம்மிருகக் கட்டு[illegible] அரிவையர்மேல், ஆதிக்கஞ் செலு[illegible]கின்றன; அடிமைப்படுகுழியில் ஆழ்த்து[illegible]கின்றது! கணவன் குடும்பத்தார் சித்திரவதை செய்தாலும் கேள்விமுறையில்லை! அத்தண்டனை பெற, "நான் செய்த குற்றமென்ன?" எனக்கேட்க உரிமையில்லை! நியாயத்தைத்கூற வாய் திறக்கினும் "பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்" என்ற பெருவிலங்கு வாய்ப்பூட்டிடுகிறது! சொத்துரிமையில்லை, கோடீசுவரனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தாலும் குழந்தையற்ற தன்மையில் விதவையாகி விட்டால் கணவனின் சொத்தில், கால் காசிக்கும் பாத்தியதை இல்லை! பெண்டிரெல்லாம் ! ஆடவரின் பரம்பரை அடிமைகளென அசட்டுப் பழக்கம் போதிப்பதால், பெண்ணை, மிருகம் போன்று பிறனிடம் பணம் பெற்று விற்றுவிடவும் இடமிருக்கிறது! வைதிகக் கொடுமை சகிக்கத்தக்கதாயில்லை! வைதீகரின் கட்டுப்பாடுகள் விதவைப் பெண்டிரின் இயற்கை உணர்ச்சியை அடக்கி ஒடுக்கிவிடுவதாயுமில்லை! எனவே, வைதவ்யக் கூற்றில் எவ்வளவும் பொருளேயில்லை! இத்தகைய அநீதியான, பிற்போக்கான, சுயநல, நய வஞ்சக, மௌடீகக்கட்டுப்பாடுகளென்னும் பெருவிலங்கால் பெண்டிர் சமூகத்தைப் பிணிக்க வேண்டாம். அவ்விலங்கைக் கழற்றி யெறியுங்கள், மனித ஜென்மத்திற்குள்ள மரியாதையை எங்களுக்கு அளியுங்கள்! என்று தான் ஆடவரைக் கேட்கிறோமேயல்லாது, எங்களைப் பிணித்திருந்த இப் பெருவிலங்குகளை கழற்றி, ஆடவர்கள் அணிந்து கொள்ளுங்கள் என்று கூறினோமில்லை! இந்நாட்டின் பதி[illegible]கோடி எண்ணிக்கையைக் கொண்ட பெண்சமூகத்தின் இவ்வேண்டுகோள், அநீதமானதா? அக்கிரமமானதா? அனுவசியமானதா? என்பதை அறிஞர்களே! சகோதரிகளே!! ஆலோசித்துப் பாருங்கள் நீங்களே.

இவ்வாறு கேட்கையில், பெண்கள் இப்படிப்பேசுவதால் 'கற்பு' கெட்டுவிட்டது, மாமூல்மாண்டு விட்டது, சனாதனதர்மம் செத்து மடிந்து விட்டது என்று வைதீகர்கள் கூக்குரலிடுகிறார்கள். இக்கூற்றில் ஏதேனும்பொருளிருக்கிறதா என்பதை அறிவுடையோர் ஆராய்ந்து பார்க்கட்டும்! எனதருமை இந்தியச் சகோதரிகளே! மேலே கூறியவாறு 'பெண்டிர் விடுதலைச் சமதர்மமும்" உலகமெல்லாம் ஒலிக்கிறது! இப்பேரொலியும், இதற்கெதிராக இந்நாட்டு வைதீகர்கள் தொண்டைகிழியக் கத்தி, மண்டை உடைத்துக் கொள்ளும் கூக்குரலும் இமய முதல் குமரிவரையும், அதற்கப்பால் கடல் கடந்தும் ஒலிக்கிறதே இந்திய சகோதரிகளே! இப்பேரொலி உங்கள் காதுகளில் விழவில்லையா? சுதந்தரத் தென்றல் முற்றி, சண்ட மாருதமாய் வீசுகிறதே! பெண்டிர் விடுதலையே தேசவிடுதலை" "சரிநிகர்சமம்" என்ற ஓங்கியதொனியும் இதோ! தமிழ் நாட்டின் "தன்மதிப்பியக்கம் உங்களைத் தட்டி எழுப்புகிறதே! இத்தகைய புரட்சிகளால் நாடிருக்கும் குழப்பத்திலேயே, அல்லோலகல்லோலத்திடையே அந்தோ! அருமைச் சகோதரிகாள்!! நீங்கள் எப்படி அயர்ந்து செய்கிறீர்கள்? இந்நிலையில் உங்களுக்கு நித்திரையும் வருகிறதா?

[illegible]யில், [illegible]கின்றது! சுயநல[illegible] மூட்டைகள், சுட்டெரிக்கப்படு[illegible]றன! விஞ்ஞான ஒளியும் சமதர்ம ஒளியும், நமக்குத் துணை தருகின்றன. எனவே எழுங்கள்! எழுங்கள்!! சுயமரியாதையைக் கொள்ளுங்கள்! சுதந்தரப் பாதையே செல்லுங்கள்! வழியடைக்கும் வஞ்சகரானோர் (கொடியர்) தடையை, சூழ்ச்சியை, சற்புப் பூச்சாண்டியை, சுயமரியாதை வாளால்வெட்டி வீழ்த்துங்கள்! வீர முழக்கம் செய்து மேற் செல்லுங்கள்! அதே நேரத்தில் நீங்கள் இல்லறச் சமாதான வாழ்க்கையின் அவசியமான உங்கள் நேரிய ஒழுக்கத்திலிருந்து தவறி வழுக்கி விழுந்து விடாதிருக்கிறீர்களா என்று பார்த்துக் கொள்ளுங்கள் "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்! தாதரென்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமான வாழ்வமிந்த நாட்டிலே"

சகோதரிகளே! [illegible]! எழுமின்! சமத்துவம் பெறும்வரையில் சலியாதுழைமின், முடிவில் வெற்றி உங்களுக்கே! நமக்கே! பெண்டிர் சமூகத்திற்கே!

ஜப்பானியர் செய்து வைத்த விஷப்பு[illegible]

கடலில் கொட்டி அழிக்கப்படுகிறது

ஜப்பானியர் தயாரித்து வைத்திருந்த கடுகெண்ணெய் ஆவித் திரவம், ஹைட்ரோ சைட் வாயு, விஷப்புகைக் குண்டுகள் முதலிய 2,600 டன் எடையுள்ள விஷ வெடிகளைத் தாங்கிச் சென்ற படகு ஒன்று இப்போது பசிபிக் கடலில் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது.

பெருத்த அளவிலுள்ள விஷப்புகை சாதனங்களைச் சேமிப்பிலிருந்து கப்பலேற்றி கப்பலை மூழ்கடிப்பது இரண்டாவது தடவையாக இப்போது நடந்திருக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சுவாதீனப் படைப் பிரிவுகள் இப்பணியைச் செய்து முடித்திருக்கின்றன.

அப்படகு அதன் "சவக்குழியை" அடையும் முன்னரே மூழ்கடிக்கப்பட்டுவிட்டது. பிரயாணத்தின் போது அதில் தண்ணீர் புகுந்து வழியிலேயே அமிழ்ந்துபோகுமோ என்று அஞ்சவேண்டியிருந்தது.

★ ★ ★

"ஆண்களோடு பெண்களும் சமத்துவமாக எத்துறைகளிலும் விளங்குவது எங்களுடைய பிறப்புரிமை என்று நீங்கள் (இந்தியப்பெண்கள்) என்று போராட முன்வருவீர்களோ அன்று நானும் என்னைப் போன்றார்களும் அகமகிழும் நன்னாள்"

Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited and Published by M. Kandaswamy, at 203, Bazar St., Tiruvettipuram. (N. A.)